# மாதகல் தமிழிசைச் சங்கத்தின்

# சிலம்பொலி



## காளி - கண்ணகி ஆலயச் சிறப்பு மலர்

வெளியீடு:
'அன்னை அறிவகம்'

விலை ரூபா 1-00

1973

## அமுதவாக்கு

பிரம்பும் தடியும் உபயோகிக்காமல், கோபமு குறையும் இல்லாமல், சம்பளத்தையும் வெகுமதியையும் எதிர்பாராமல் நமக்குக்கற்பிக்கும் சிறந்த ஆசான் நூல்களே.

நூல்களைச் சென்றடைந்தால், உறங்காமல் சோர்வு கொள்ளாமல் அவை நமக்கு அறிவு கற்பிக்கும். நீங்கள் தேடும்போது எதையும் மறைக்காமல் அளிக்கும். நீங்கள் பெருந் தீங்கு செய்தாலும் வசைமொழி கூறாமல் உங்கள் அறியாமையைக் கண்டு நகைக்காமல், கற்பிப்பனவும் நூல்களே!

— ரிச்சேட் டி — பியூரி


## அன்பளிப்பு

# மில்க்வைற் சோப் தொழிற்சாலை

த. பெ. இல. 77, யாழ்ப்பாணம் தொலைபேசி: 7223

மில்க்வைற் சோப் மேலுறைகளை அனுப்பி அறிவு நூல்களை வாங்கிப் படியுங்கள்

உங்கள் உடைகளை வெண்மையாக வைத்திருக்கத் தினமும் பாவியுங்கள்

# மில்க்வைற்

நீலசோப், பார்சோப், சலவைப்பவுடர்



மாதனை

தமிழிசைச் சங்கத்தின்

# சிலம்பொலி

M. SATKUNAM, M. A.



## காளி - கண்ணகி ஆலயச் சிறப்பு மலர்

வெளியீடு :

அண்ணா அறிவகம்

1973

7/1/74

5/1/74

# மாதனை தமிழிசைச் சங்கத்தின்

# சிலம்பொலி



M. SATKUNAM B.A. (HONS)

## காளி - கண்ணகி ஆலயச் சிறப்பு மலர்

தொகுப்பாசிரியர்கள்:

பெருநிதிக்கிழார் — நியாயவேந்தன்
மன்னர் மன்னன் — சிதம்பரச் செம்மல்

வெளியீடு:

**அண்ணா அறிவகம்**

**1973**

M. SATKUNAM, M. A.

# சமர்ப்பணம்



*பேரறிஞர் அமரர் அண்ணாவின் திருவடிகளுக்கு இம்மலரைப் பணிவன்புடன் சமர்ப்பிக்கிறோம்.*

---

## வாழ்த்துரை

**நண்பர்களே!**

முத்தமிழ் பணியும், நாட்டின் வளமும் கண்ணெனக் கருதி, இத்துறைக்கு ஊக்கம் கொடுக்கும் முகமாக, இந்நூல் அமைதிருப்பதை ந எண்ணும்போது நான் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன். தங்கள் நன் முயற்ச்சிக்கு எனது வாழ்த்துக்கள்.

தங்கள் பணி தொடரட்டும்!

அன்புள்ள,

கனக – இராமச்சந்திரன்

(உள்ளூராட்சி மன்று -கொழும்பு)

கொழும்பு. 10

15 - 7 73

# முகவுரை

'மாதனை' வேளாப் பார்ப்பாரது பேரூர். இங்குள்ள மக்களிடையே முற்காலத்தில் அருங்கலைகளான பொறியியற்றுறை, முத்தமிழ்க் கலைத்துறை, நுண்கலைத்துறை என்பவற்றோடு, தெய்வ வழிபாடும் வளர்ந்து வந்ததென்பது பலரும் அறிந்த உண்மையாகும்.

சகல கலைகளையும் பேணி, இலைமறை காயாக வாழ்ந்துவரும் பல்துறை அறிஞர் இன்னும் உளர். அன்றும் இன்றும் அருங் கலைகளின் இருப்பிடமாக விளங்கும் இவ்வூர்ச் சிறப்பினை எடுத் துக்காட்டு முகமாக தமிழிசைச் சங்கத்தின் சார்பில் இம்மலரை வெளியிடுவதில் பெருமகிழ்ச்சி அடைகிறோம்.

அண்ணா அறிவகம்.

அண்ணா அறிவகம்
மாதனை
பருத்தித்துறை
ஸ்தாபிதம்: 1-1-73
ANNA ARIVAKAM

மாதனை,
பருத்தித்துறை.
15-7-1973.

★ ★ ★

# அருள் வாக்கு

"இவ்வளவு பசுவின் நெய்யையும் விலையுயர்ந்த சந்தனக் கட்டைகளையும் ஹோமத்தீயில் போட்டு ஏன் பாழாக்க வேண்டும்" என்று பரிதாபப்படுகிறீர்கள் இது எனக்குத் தெரியாததல்ல இது வெறும் வரவு—செலவு மனப்பான்மையை வெளிப்படுத்துகின்றது, கூட்டல் கழித்தல் என்னும் கணக்குச் சிக்கல்களில் அகப்பட்டுக்கொண்டால் அடைய முடியாத திருப்தியை—ஆனந்தத்தை எவ்விதம் அடைவது? இவர்களுக்கு நெய் வேண்டும்; இலாப நஷ்டத்தை எடை போட்டுக் கணக்கிட வேண்டும்; ஏட்டில் எழுத வேண்டும். சந்தனக்கட்டை வேண்டுமே தவிர, அந்த நெய்யாலும் சந்தனக்கட்டையாலும் பெறக்கூடிய ஆனந்தம் வேண்டியதில்லை. இந்த யாகம் இங்கு கூடியிருக்கும் இருபதினாயிரம் மக்களுக்கு அளிக்கும் ஆனந்தத்திற்கு என்ன விலை? அந்த விலைக்கு எத்தனை நெய் எத்தனை நெய் டின்கள் வாங்கலாம்; கணக்குப் போடுங்கள்

ஹோமாக்கினியில் நெய் ஊற்றுகிறார்களே என்று வருத்தப்படுபவர்களை ஒரு கேள்வி கேள்வி கேட்கலாம். பிறந்தது முதல் இன்றுவரை நீங்கள் ஒவ்வொருவரும் எவ்வளவு மூட்டை அரிசியைப் பாழக்கிறீர்கள். யோசியுங்கள்! எவ்வளவு டின் நெய் உங்கள் வயிற்றில் விழுந்திருக்கின்றன? அதற்குப் பயனாக நீங்கள் என்ன படைத்தீர்கள்? உங்களுக்குத் தற்போது ஆனந்தம் இருக்கிறதா? மனச்சாந்தி அமைந்திருக்கிறதா? உங்களைச் சேர்ந்தவர்களுக்குச் சுகம், சாந்தம் சந்தோஷம். உங்களால் கிடைத்திருக்கிறதா? இந்த அக்ஞானத்தைக் கண்டு களித்திருக்கும் மக்களைக் கணக்கிடுங்கள். போகட்டும். நெய்க்கும் சந்தனக் கட்டைக்கும், யாரையும் சந்தா கேட்டதில்லையே! பின் வருத்தம் எதற்காக? நானும் என்னைச் சேர்ந்தோரும் மகிழ்ச்சியடைகிறோமே, அதற்காகவா? பிறருக்கு இந்தப் பேச்சு எதற்கு?

துச்சமான உலக விடயங்களில் மனம் அகப்பட்டுக் கொண்டு இருப்பவரின் கொள்கையது! ஆத்மீக ஞானத்தின் கொள்கை இது!! நெய்க்கும் சந்தனத்துக்கும் வாதாடும் கொள்கையது! எண்ணிலா மகிழ்ச்சியின் அவா இது!!

**பகவான் ஸ்ரீ சத்தியசாயிபாபா**

---

"எவன் ஒருவன் பிறன் முன்னிலையில், தனக்குப் புகழ்மேல் ஆசையில்லை என்கிறானோ; அவன் தன்னைப் பிறன், புகழ்மேல் ஆசை இல்லை என்று புகழட்டும் என்பதற்கே"

— **நியாயப்லந்தன்**

# இலக்கிய கர்த்தாக்களும், சமயமும்.

உலகில் அமைதியான முறையில் ஒருமகத்தான புரட்சி நிகழ்ந்து கொண்டிருக்கிறது. இதனுடைய அலைகள் சமூகத்தின் எல்லா அம்சங்களிலும் மோதிக் கொண்டிருக்கிறன. இந்தப் புரட்சியில் இலக்கிய கர்த்தாக்களின் பங்கு முக்கியம் வாய்ந்ததாகும் கடந்த காலத்தால் உருவாக்கப்பட்ட இலக்கிய கர்த்தாக்கள் நிகழ் காலத்தை அநுபவித்து வருங்காலத்தை சிருட்டித்து வருகிறார்கள் இவர்களிடம் குடிகொண்டுள்ள நல்லறிவே பலாத்காரத்தையும், தீமைகளையும், வெறுத்து சத்தியம், தயை ஆகியவற்றில் மக்களை அன்பு பூணச் செய்கிறது. மனித சமுதாயம் சிறப்புற வாழ்வதற்கு சமய உணர்வு அவசியம்.

சமயம் என்பது ஒருவனை முற்றிலும் புதுமனிதனாக மாற்றி விடுகிறது; அஃதே வாழ்க்கை முறை. ஆத்மீகத் துறையில் பூரணமான ஒரு மாறுதலை உண்டாக்குவதுதான் அதன் இலட்சியம். சமயம் ஒரு கோட்பாடு அல்ல; மனோபாவமும் அல்ல அது ஒரு அதிமுக்கியமான ஆத்ம அனுபவம். உள்ளத் தூய்மை பெறுவதற்காக அநுஷ்டிக்கும் கடுமையான சாதனைகளின் விளைவாக ஏற்படக்கூடியது அது. தவறுதலாக இந்தச் சாதனைகளையே இலட்சியமாகக் கொள்ளக் கூடாது.

கிறிஸ்தவர்கள் எல்லோரும் ஒன்று சேர வேண்டும், இஸ்லாமியர்கள் எல்லோரும் ஒன்றுசேர வேண்டும். இப்படிப் பல இயக்கங்கள் இருக்கின்றன. இவற்றை விட உலகம் முழுவதிலும் உள்ள ஆஸ்திகர்கள் யாவரையும் ஒன்றாக இணைக்கும் ஓர் இயக்கமே அவசியமாகும் என்று எண்ண வேண்டிய தருணம் வந்துவிட்டது. அன்றியும் உலக மக்கள் அனைவரும் ஆத்மீக அடிப்படையில் தர்மத்தைக் கடைப்பிடித்து ஒற்றுமை காண விளையவேண்டும். தர்மத்தின் உட்பொருள் அன்பு. மற்றவர்பால் தயவுகாட்டவேண்டும்! இப்பணியில் நாம் இடையறுது முயன்று கொண்டேயிருக்க வேண்டும். இன்னல்கள், எதிர்ச்சிகள், முரண்பாடுகள் முதலியவை நம்முயற்சியைத் தடைசெய்ய இடம் தரல் ஆகாது. பொருளாதாரம், சமூகம், சமயம் ஆகிய எல்லாத் துறைகளிலும் வித்தியாசங்கள் ஒழிப்பதற்கு மதப் பற்றுள்ளவர்கள் பாடுபட வேண்டும். இந்த ஆக்கப்பணியில் இலக்கியக் கர்த்தாக்களின் பங்கு முக்கியமானதாகும்.

தத்துவஞானி டாக்டர்
**எஸ். இராதாகிருஷ்ணன்**

# காளி ஸ்தோத்திரம்

## காப்பு

ஆனைமுகத் தானையகத் தேயிருத்து வான்கலிக்கு
ஊனமுற லுண்டோ உரை

## விருத்தம்

வான்மதி தன்னை வளர்சடை மேல்வத்த வானர்தம்
கோன்மதி கொண்டுடன் கூடி நடம்பயில் கோதையெனும்
பான்மதி மேனின்று நல்லொளி காட்டிடப் பார்க்கறியா
தேன்மதி கெட்டதுவோ தெளிவீர் திருப்பதம் தேடுமினே:

சத்தியே முத்திதரு வித்துநீ காளியே
 சகலகலை வாணி நீயே
சித்தமிசை சூடிகொண்டு நத்திவிளையாடிடும்
 சித்துநீ பற்று நீயே
கற்றுவரு மடியவர்கள் புத்திதனி லேயுறை
 கண்கண்ட தேவி யாகி.
கருதரிய சித்திபல மிகவினிய மனசினொடு
 காட்டிடும் கருணை ரூபி
கருத்திலுன் பதமலர்கள் இருத்து—மடி யார்கள் தம்
 கடுவினைகள் தீர்த்தருள வே
திருத்தமுறு கட்கமது பொருத்தமொடு கையேந்து
 சிம்மவாகினியு மாகி
வருத்தமது நீங்கவே வளமேவு மாதனை
 வந்துறையு மாகாளி யே
மகமாரி சுகுமாரி கௌமாரி எனவோது
 மடியார்கள் குலதெய்வ மே.

பக்தியொடு நினதுதிரு பாதமலர் பற்றியே
 பாடிவரு மடியர் தங்கள்
பாவவினை போக்கிடும் பராசக்தி யம்மையே
 பகரறிய பான்மை மேவி
அப்பனைச் செஞ்சடை யண்ணலார் அன்னையே
 அணைத்திடும் அம்மை நீயே.
ஆனந்த ரூபிய அம்மையே செம்மையே
 அறிவரிய பெருமை யுடையோய்

இப்படியில் உனையன்றிச் செப்பிடக் கருணையில்
இணையான தெய்வ முண்டோ
அப்பனின் ஆனந்த சோதியின் பங்காகி
அகிலமும் ஆண்டருள வே
ஒப்பேது மில்லாத உயர்வான பேரின்ப
வெள்ளமே உள்ள மதிலே
வைத்தோ முமைக்கவலை விட்டோ மனைத்தருளப்
பெற்றேமெஞ் சோதி மயமே.

## கும்மி

அண்டச ராசரம் ஈன்றவரே யெங்க
ஆதிபராசக்தி அம்மாவே
எண்டிசை யாடை தரித்தாரே — என்றும்
எங்களை யாண்டிட வந்தாரே

மாதவன் சோதரி ஆனவரே — இந்த
வையமெலாம் புகழ் கொண்டவரே
கானநடஞ் செயும் வல்லாரே — எழில்
காளிதேவி யம்மை காணீரே

சீவர்கள் சஞ்சலம் தீர்த்திடவே — இருள்
மாமலம் மாய்ந்து மடிந்திடவே
சோமள வல்லி குறித்தாரே — இந்த
மாதனை மேவி யிருந்தாரே.

தீரா வினைகளைத் தீர்த்திடுவார் — எமைச்
சிந்தையுள் நின்று செலுத்திடுவார்
வாராத சித்திகள் வந்திடவே — அருள்
நேராகவே தந்து காத்திடுவார்

வாழ்த்தி வணங்கி நிதம்வருவோம் — எங்கள்
மாமாரித் தாயைவலம் வருவோம்
கீர்த்தி தரவேவரம் பெறுவோம் — காளி
தேவி யெத்தாயெனப் பாட்டிசைப்போம்

கவிமணி செ. மாணிக்கம், B. A. (Lond.)

* * *

# தெவிட்டாத தீந்தமிழ் சுவைத்திட வேண்டும்!

— சு. சண்முகநாதர் —

1. தொட்டிலிலே தவழ்ந்த தமிழ்க்குழந்தை சிந்துந்
தேமதுர மொழிகேட்ட குறுமுனிவன் றானும்
மட்டிலாப் பெருமகிழ்வா யோடிவந் தணைத்து
முத்தங்கள் பலகொடுத்து இலக்கணங்கள் வகுக்க
கட்டவிழ்ந்த மலர்போலக் காசினியிற் கமழக்
கணக்கிலாக் காப்பியங்கள் தேங்கினின்றே யொளிரும்
எட்டுத் திசையினிலே யெம்மொழியாந் தமிழைப்போல்
இனிக்குமொழி வேறேதுங் கண்டதுண்டோ சொல்வீரே!

2. பன்னரும் பலமொழியுள் உயர்பெருமை தனைக்கண்டு
பாவலர் தம்நாவாற் பாங்காகப் புகல்கின்ற
பொன்னனைய கருத்துடனே பொருள்வளங்கள் பலமிகுந்து
பொன்றாத பொலிவுடனே யென்றென்றும் நின்றிலங்கி
தன்னிணையில் சந்திரன்போல மொழிவானில் நீந்திவரும்
தமிழ்மதியே! யென்னுளத்து அகலாதே யினிக்கின்ற
என்னருமைக் கனியமுதே! காசினியோ ரேத்துகின்ற
ஏற்றமிகு மொழிகளிலே யுனக்கொப்ப மொழியுளதோ?

# தமிழ்நாடு தந்த தலைவனின் தாழ் பணிவோம்!

— சதா. கனகசபையீசன் —

தங்கத் தமிழ் நாடு தந்திட்ட தானைப் பெருந் தலைவன்
சங்கத் தமிழ் பேசி சாதிமத பேதந் தகர்த்து நின்றார்
பொங்குங் கடலு லகில் பேரறிஞ ரண்ணா பெயர் சூழ்க
மங்காச் சிறப்புடைய அவர்மலர்ப் பாதம் பணிந் திடுவோம்.

# ஆலய வரலாறு

ஆசிரியை செல்வி பாலாம்பிகை கனகசபை



பொன்னி நாட்டிற் பிறந்து வஞ்சி நாட்டிற் தெய்வ வடிவுற்ற கண்ணகிக்கு முதலிற் கோயில் அமைத்தவன் சேரன் செங்குட்டுவன் என்னும் பெருமன்னனாவான் **"யான் பெறுமின்பம் பெறுகவிவ் வையகம்"** எனவுளத்தே கொண்டு சிலைப் பிரதிட்டை வைபவத்தில் பிறநாட்டு மன்னர் பலரும் பங்குகொள்ளச் செய்தான் இம்மன்னன். இவ்வாறு பங்குகொண்டவர்களில் "கடல்சூழ் இலங்கைக் கஜபாகு வேந்தன்" எனப் பலராலும் பாராட்டப்பட்ட கஜபாகு வேந்தனும் ஒருவனாவான். கண்ணகி கோயில்கொண்ட வைபவத்தைக் கண்டு பரவசமுற்ற பலரும் தமது நாடுகளிலும் அக்காட்சியைக் கண்டுகளிக்க, மக்களுக்கு மாதாவாம் பெண்ணை வழிபடத் தத்தமது நாட்டிலும் நிலைபெற்று அருள் புரிய வேண்டுமென வேண்டினர். அப்படியே வாக்கருளிய கண்ணகி வழிபாட்டை இலங்கையிலும் பரப்பிய மன்னன் கஜபாகு வேந்தனே!

அவ்வாறு இலங்கையில் அமைக்கப்பட்ட பழைய ஆலயங்கள் பல. அவற்றுள் இவ்வாலயமும் ஒன்றாகும். பருத்தித்துறை கடற்பெருந் துறையாய்ப் பண்டைநாளிற் சிறப்புற்று விழங்கியது இந்தியா செல்வோர், இதனையே பெருவழியாகக் கொண்டனர். தனது வாக்கால் வரம் பெற்றுப் பருத்தித்துறையில் இறங்கிய மன்னன் கோயில்களை அமைத்து நாட்டை வளம்படுத்த எண்ணினான், அவ்வாறாய எண்ணத்தைச் செயற்படுத்தவும் துணிந்தான்.

வான் பொய்ப்பினும் தான் பொய்யாக் காவிரியாய நாட்டின் செந்நெற் கழனிகள் மிகவுள எனப் புலவர் பலர் பாராட்டியுள்ளனர். அதனாற்றானே தெரியாது கண்ணகியம்மையும் அக்காலத்து "ஆனைகட்டும் தாளும் வானைமுட்டும் போரும்" அமைந்து விளங்கிய மாதனை வயல் என்னுங் காணியிற் கோ

யில் கொண்டெழுந்தருளினள். இது தோம்பு எழுதப்பட்ட காலத்து வாழ்ந்த மாதனையூர் வாசியும் பெருநில உரிமையாட்டியுமான சிதேவியம்மைபாரின் காணியாகும். அவர் இவ்வாலயத்துக்கும் இதன் மேற்குப் புறத்தே அமைந்திருக்கும் பிள்ளையார் கோவிலுக்கும் உரிய அளவு காணியினை மரண சாதனம் எழுதி, இவற்றின் உரிமையாளராக தனது இனத்தவரில் ஒருவரையும் நியமித்து வாழ்ந்தார். அவ்வாறு உரிமையாளராக நியமிக்கப்பட்டவரது சந்ததியாரே இன்றும் இக்கோவிலையும் பிள்ளையார் கோவிலையும் தக்க முறையிற் பரிபாலித்து வருகிறார்கள்.

ஆனல் இங்கு வழிபடுவோர் இவ்வூரவரும் அயல் ஊர்களாகிய வராத்துப்பளை, தும்பளை, கற்கோவளம், பருத்தித்துறை வாழ்மக்களும், நாளடைவில் இவ்வூர்களிலுள்ளவர்கள் பிறவூர்களுள் விவாகஞ்செய்து பரவி வருதலாய் தற்போது யாழ்ப்பாணக் குடாநாட்டிலுள்ள தூரவிட மக்களும் வந்து வழிபாடாற்றிச் செல்கின்றனர்.

இக்கோவிலின் தலவிருட்சம் இலந்தையாகும். இம்மரம் எப்பொழுது உண்டாக்கப்பட்டது என எவராலும் சொல்லமுடியாத பழமை வாய்ந்தது. ஆனல் இன்று பெரும் பொந்து உடையதாகக் காணப்படினும், கிளைகள் விட்டுப் பசுமையுடன் காணப்படுகிறது. பழங்களில் புழுவரியாது என்பது பழைய ஐதீகம். இன்றும் கண்ணேய், புண் என்பவற்றுக்கு இலையை அரைத்துப் பூசிக் குணமடைந்து வருகிறார்கள். கோவிலின் உட்பிரகாரத்தே தென்மேற்குமூலையில் நிற்கும் மற்ருேர் மரம் வேம்பாகும். அதன் இலையை அம்மனது அர்ச்சனை மலர்போல வெண்ணி அம்மை, கொப்புளிப்பான்போன்ற கொடுந் தொற்றுநோய்கள் பரவும் காலத்து வீட்டு வாயிலிற் கட்டியும், நோயுற்ருேர் படுக்கையிற் பரப்பிப் படுக்கவைத்தும் வரும் வழக்கம் இன்றும் உளது. கோவிலில் விளக்கு வைத்து, முதற் பொங்கல் முடிக்கும்வரையுள்ள பதினைந்து நாளும் வழிபடு பெண்கள் குடங்களில் நீர்கொண்டு இவ்விரு விருட்சங்களையும் கண்ணகியைத் தீர்த்த மாட்டும் பாவனையில் அடியில் ஊற்றி வழிபடுவர்: இலந்தைக்கு ஊற்றும் நீர் கோயிலைச் சேருக்கா வண்ணம் இலந்தை மரத்தைச் சுற்றி வட்டவடிவினதாகக் கட்டப்பட்டிருக்கும் தொட்டி கண்ணகியருளைக் காட்டும் அரும்பெருஞ் சான்ருகும். நீருற்று மகளிர் அம்மனை வேண்டும் வரங்களும், வரம் பெற்ருேர் மகிழ்ச்சியாற் பாடும் துதிகளும் மெய்சிலிர்க்க வைக்கும்.

கோயிலின் தீர்த்தக் கிணருகவமைந்து வடக்கு வீதியில் உள்ளும் புறமும் சமபங்காக இருக்கும் கிணறு அன்பருக்கும் மையருளிய அரும்பெருந் தீர்த்த

மாகும். அம்மை, கொப்புளிப்பான்போன்ற தொற்று நோய்கள் உற்ற காலத்து மக்கள் இக் கிணற்றில் நீராடிப் பொங்கல் செய்வதையும், சிரங்கு, சொறி முதலிய சிறு நோய்கள் உற்றோர் தினமும் நீராடி வழிபடுவதையும் இன்றும் காணலாம்.

இவ்வாறு தலம், மூர்த்தி, தீர்த்தச் சிறப்புடன் வீற்றிருக்கும் அம்மைக்கு, வைகாசி மாதத்து விசாக நட்சத்திரத்துடன் உறும் திங்கட்கிழமை கொடியேற்றி எட்டு நாள் 'கோவலன் கதை' என்னும் நூலைப் படித்துப் பொங்கலை நடத்துவர். பொங்கற் பானைகளில் வளர்ந்து பொங்கிவரும்போதே அடுத்த வருடத்து இவ்வூரில் நிகழவிருக்கும் மங்கல அமங்கல நிகழ்ச்சிகளை அநுபவரீதியாகக் கூறும் முதியோர் நம்மிடையே யுளர்.

தனது அடியாரை இடரின்றிக் காக்கும் தாயாம் கண்ணகியம்மை எம்மைக் காத்து அருள் புரிவாளாக!

---


## சங்கீதப் பிரியர்களுக்கு ஓர் அரிய சந்தர்ப்பம்!

நீங்கள் விரும்பும் :

1. வாய்ப்பாட்டு
2. வயலின்
3. மிருதங்கம்
4. நடனம்

—எதுவாகினும்

எங்கள் மன்றத்தில் கற்றுக் கொள்ளலாம். சிறந்த ஆசிரியர்களைக்கொண்டு தகுந்த முறையில் வகுப்புகள் நடத்தப்படுகின்றன.

ஒவ்வொருவருக்கும் தேர்வு நிச்சயம்.

விபரங்களுக்கு :

# மாதனை தமிழிசைச் சங்கம்

பருத்தித்துறை.

தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி :

இசைமணி க. துரைராசா
மாதனை,
பருத்தித்துறை.

மாதனையில் கோயில் கொண்டெழுந்தருளியிருக்கும்

# கண்ணகியம்மை பதிகம்

## விநாயகர் துதி

மாதனையில் வீற்றுன் மலர்த்தாள் பணிவோர்க்கு
வேதனைகள் தீர்க்கும் விநாயகா — காதலுடன்
வன்மாலை போக்கியருள் மாதாவாங் கண்ணகிமேற்
சொன்மாலைக் கீவாய் துணை.

## நூல்

1. சீர்பெற்ற பூம்புகார் தோன்றிவளர் மதலையே
சிறந்தமா நாயகன் மகளே
செழுமைபெறு மாங்கனி யாயமை யம்மையே
திருவளர் வணிகர் கொடிபே
பேர்பெற்ற மாசாத்து வானது மருகியே
பேணில் வறத்து நங்காய்
பெட்புடைய தாமரை யுறைமாது அனையளே
பேசருங் கற்ப ணங்கே
கார்பெற்ற தோகையாய்க் கவினுடைய காரிகை
கன்னியர்க் குற்ற தலைவி
கண்டேனும் மொழிபேசி யண்டரும் போற்றிடக்
கணவனுடன் வாழ்ந்த மின்னே
ஆர்பெற்ற செந்நெல் விளை வயலுற்று மேன்மைபெறு
மழகோங்கு மாதனையிலே
அன்பருக் கின்னருள் பாலிக்க வீற்றிருந்
தருளுகண் ணகையம் மையே

2 கலைபோற்றி கணவனற் கணிகையாம் மாதவி
கற்றுவரு நடன மதிலே
கருத்தழிந் தவளுடன் வாழ்ந்துவரு பொருளெலாங்
கணக்கிலா தளிக்கு சாலை
நிலைபெற்ற தலைவனது விருப்பமே காரிகையர்
வனப்பென நெஞ்சி லுன்னி
நெய்யுடன் பூவினை யணிந்தழகு செய்யாது
நேசமாய் வரவு நோக்கி

விலைபெற்ற செல்வமது குறைகின்ற வெண்ணமே
    விரும்பிடா திருந்த போது
வினைதவறு கண்டுவரு பத்தாவின் வரவினை
    இரவிகாண் தாம ரையென
அலைபோன்ற வாசையால் கண்டுமகிழ் அன்னமே
    அழகாரும் பொறைம டந்தாய்
அறிவோங்கு மக்கள்மதி மாநகரையில் வீற்றிருந்
    தருளுகண் ணகையம் மையே.

3. கணிகையது செயலினாற் கருத்தழிந் துன்னை நினை
    கணவனை விரும்பி மிக்க
காதலா யின்பமொழி பேசியே கனிவித்துக்
    கைப்பொரு ளிலாத குற்றம்
பணிபெற்ற சிலம்பதை விற்றுநீக் குவனெனப்
    பண்புட னீந்த தாயே
பலரறிய வாழ்ந்தவூ ரதனிலே தாழ்ந்துவாழ்
    பான்மையை வெறுத்த கோதாய்
மணிபெற்ற மதுரைநகர் வருகவென வுரைசெய
    மறுத்திடா தேகு சாலை
மாண்புடைக் கவுந்தியாம் மூதாட்டி மன்னுபுகழ்
    மாட்சியா யேத்த நின்றாய்
அணிபெற்ற காமுக ரிகழ்ந்துநரி யுருவாக
    வன்புட னருள்பு ரிந்தோய்
அழகாரு மக்கள்நிறை மாநகரையில் வீற்றிருந்
    தருளுகண் ணகையம் மையே.

4 சிலம்புவிலை கூறுநின் கணவனைக் கள்வனாச்
    சிருட்டித்த கயவன் வார்த்தை
சீராக வோராது மன்னன் செய் தவறினைச்
    செகமதிற் காட்ட வென்றே
புலம்பாது தென்னவன் வாயிலிற் றோன்றிநற்
    பொருவருஞ் சிலம்பு டைத்துப்
பொன்றுது நீதிநிலை நாட்டியே பொங்கிவரு
    சீற்றமது தணித லின்றித்
தலம்புகழ் மதுரையெரி யூட்டியே தாயாகத்
    தவமற்றோர் வாழ வருளித்
தான்றோன்றி மதுரைமா தெய்வமுன் வரலாறு
    சாற்றிடக் கேட்ட தையால்
அலைபலில் லாலவாய் விட்டுமே சினமாறி
    அழகாரு வஞ்சி யுற்றாய்
அறிவுபெறு மக்கள்வாழ் மாநகரையில் வீற்றிருந்
    தருளுகண் ணகையம் மையே

5. வஞ்சிநக ருற்றொரு வேங்கையின் நிழலினில்
வனவேடர் போற்றி மகிழ
வளமுற்ற கணவன்வரு விமானம் தேறியே
வானுல கடைந்த மயிலே
பஞ்சின்மெல் லடிப்பாவை பெருந்தேவி வேண்டிடப்
பகரிமைய மலையி லுற்றுப்
பாங்காக வேசிலை வடித்துவரு சேரனின்
பெரும்பணி யுவந்த தேவே
தஞ்சமென வுனைவேண்டி யெமதுநா டுறைவையெனத்
தரணிபர் கேட்க வின்பாய்த்
தலமோங்கு ஈழமொடு பிறநாடு சென்றுற்றுத்
தாவரு மருள்பு ரிந்து
அஞ்சலென வபயமளித் தங்கங்கு பலகோயில்
அமைத்திட வாங்கு முறைவோய்
அணிபெற்ற செல்வமலி மாதனையில் வீற்றிருந்
தருளுகண் ணகையம் மையே.

6. வான்புகழ் வைகாசி மாதத்து வருதிங்கள்
வாரியில் நீர்கொ ணர்ந்து
வளருநற் றமரைத் தண்டெழு நூலினால்
வனப்புறத் தீப மேற்றித்
தான்புக லடுத்துவரு சோமவா ரந்தனிற்
றலைக்கடை கொடிய தேற்றித்
தமிழோடு இசைபாடு மக்கள்பலர் கூடிநின்
சரிதையைப் பாடி நிற்ப
ஊன்புனல் வற்றிட வொருவாரம் நோற்றிடு
முறுதியுடை மக்க ளுக்கு
உள்ளமகி ழுன்னிய வுறவைக்கு வித்தகி
உன்கடை வாயி னின்று
ஆனபோல வுருகி[illegible] யமைவன வீவையென
அன்புட னுக[illegible] தேவே
ஆற்றல்மலி மக்கள்மிகு மாதனையில் வீற்றிருந்
தருளுகண் ணகையம் மையே.

7. காதைமுழு தும்படித் தமிர்தமாம் பொங்கலைக்
கருத்துடன் முடிக்க வெண்ணிக்
காண்பெரிய குடமதில் நூல்சுற்றிக் கவினுற
வெற்றிலை கட்டி யன்பர்

பேதைமனம் மகிழவரு பொங்கலில் விலையது
வாடாது செய்ய ணங்கே
பிரிந்துவரு இழையியனுந் தீயினில் வேகாது
பிரியமாய்க் காக்கு மன்னாய்
வாதையொடு வருகொடிய நோய்களை யுன்றனது
வளரடியர் மீது ருது
வாகாக காத்துவரு வனிதையே யோரைந்து
பொங்கலை யேற்கு மாதே
ஆதைய லென்றுனை யாதரி யார்க்குமே
யன்புட னுதவு மாவே
ஆசார மக்கள்மிகு மாதனையில் வீற்றிருந்
தருளுகண் ணகையம் மையே.

8. தொழுநோய்கள் முதலாய கொடுரோகங் கொண்டுளந்
தொழுதிலாத் துட்ட ரேனுஞ்
சொந்தமுற வுன்றனது கோயிலி லார்த்திடு
தீர்த்தமதிற் றோய வுற்ற
பழுதிலாக் காயமொரு பகலினி லுறுவரே
பாவையர் நோக்கு வண்ணம்
பகரரிய சுகமதை யளித்துவரு மருத்துவை
பாங்காக வமரி லத்தை
விழுதனைய விலையினை யரைத்துமே பூசவரு
விழிநோயும் விட்டு நீங்கும்
வேப்பிலை நேர்த்திசெய வம்மைமுத லானவை
வேதனை செயாது அகலும்
அழுதழுது மடியேந்து மலடிக்கும் ஆசையுற
வருமக வுதவு தாயே
ஆண்மைசெறி மக்கள்மிகு மாதனையில் வீற்றிருந்
தருளுகண் ணகையம் மையே.

9. கரைதனைக் காணாது கடலினிற் செல்லுவோர்
கடும்புய லிறுதி கூட்டக்
காத்திடு தாயெனக் கூறவே யன்பிறைற்
கரையினிற் சேர்க்கு புணையே
வரையுருளு மக்களு முனைவேண்ட வருமன்னை
போலவே காக்கு மன்பே
வளருனது அடியரைப் புள்ளெனச் சிறகினில்
வாகாகக் காக்கு மரசி

விரையுற்ற பாதமலர் கண்மலர் சாத்துவார்
வினைநறித் தருளு தலைவி
விளைகாத லுடன்வலஞ் செய்திட வுன்னிரு
விழிகளின் நோக்கு நீடும்
அரையர்க்கு புலைஞர்க்கு மருள்சொரியு மேகமே
ஆய்ச்சியர் குரவை கொள்வோய்
அறமுற்ற பெருமையார் மாதனையில் வீற்றிருந்
தருளுகண் ணகையம் மையே.

10. காவடி யெடுத்துனது வாயிலில் வருவோர்கள்
கடுவினைக ளோடி யகலும்
கரகமது தாங்கிவரு பக்தரின் பாவவினை
கட்டறுத் தகலு மம்மா
பூவடி காணுசை தனிலுருளு மக்கடாம்
யோகம துற்று வாழ்வார்
பொங்கிவரு பாற்குடம் கற்பூர மேந்துவார்
பொருந்துவன யாவு முறுவர்
சேவடி மலராகக் கோவலன் கனகோவின்
சிலப்பதி கார மோடு
வழக்குரை ஏற்றுமகிழ் தெய்வமே சிங்கார
வேலனுஞ் சிறுவ னுன்பால்
ஆவலாய்ச் சொல்பதிக மடிகளிற் சாத்தினேன்
ஆசுதீர்த் துவந்து கொள்வாய்
ஆதுல ரிலாதநல் மாதனையில் வீற்றிருந்
தருளுகண் ணகையம் மையே.

பண்டிதர் கு. க. சிங்காரவேலு.

★ ★ ★

"மதம் என்றால் குருட்டு நம்பிக்கை, பிற்போக்கு, ஆராய்ச்சிக்கு அடங்காத கொள்கை, வெறி, மூட பக்தி, சுரண்டல், பரம்பரைப் பாத்தியப் பாது காப்பு என்று எனக்கு எப்பொழுதுமே தோன்றும். இருந்தாலும் அதற்குள்ளே வேறொரு பொருளும் இருக்கிறதென்று எனக்கு நன்றாகத் தெரியும்"

—பண்டிதர் ஜவஹர்லால் நேரு

# வேதனை தீர்த்திடும் மாதனை கண்ணகி

ஆக்கம் — மாதனையூர் கா. நடராசன்

புகழ்மிக்க புலவர்களின் புலமை ஒலி அல்லும் பகலும் ஒலித்துக்கொண்டிருத்தலால் புலோலியெனக் காரணப் பெயர் பெற்ற புலோலியின் கிழக்குப் பகுதியிலே அமைந்துள்ளது. அழகினில் மாதினையொத்த மாதனை என்னும் கிராமம், இது இயற்கையழகும் காவும் காட்சிகளும் கொண்டது. ஊரின் வடக்குப் பக்கத்திலே, மூர்த்தி, தலம், கீர்த்தி கொண்ட காளிகோவில் அமைந்துள்ளது.

''மகிடனுரங் கிழித்தமரா வாழ்த்துக்கூற
வைத்தவன்றன் மடிமீது குதித்து நின்றே
தகதிகிட தகதிகிட வென்றேயாடுஞ்
சார்வரீய காளிதனை யகத்தே கொண்டு"

என்று, இவ்வூரையும் காளியம்மனையும் சிறப்பித்துப் பாடியுள்ளார் காலஞ்சென்ற தமிழ்த் தாத்தா கந்தமுருகேசனார். ஊரின் கிழக்குப் பக்கத்தேயுள்ள வயல்வெளி பல காலமாகப் பயிர் செய்யப்படாமையால், தரிசாகக் காட்சியளிப்பதுடன் மாணவர்களுக்கு விளையாட்டு மைதானமாகவும், மக்களுக்கும் பொழுதுபோக்கு மிடமாகவும் பயன்படுகிறது. இந்த வயலையொட்டிக் கிழக்கு எல்லையிலே, கண்ணுக்கெட்டிய தூரம்வரை கலியுக கற்பகதருவான பனை மரங்கள் பசுமையாகக் காட்சியளிக்கின்றன. வயல் வெளியின் தெற்குப் பக்கத்தில், கிழக்கே முகம் காட்டி, அருளொளி வீசும் கண்களுடனும் அடியார்க்கு அபயமளிக்கும் திருக்கரங்களுடனும் கோயில்கொண்டிருக்கிறாள் மாதனை கண்ணகி. இக்கோவிலின் உட்பிராகாரத்தைச் சுற்றி இலந்தை வேம்பு ஆகிய மரங்களும், வெளி மண்டபத்துக்கு முன்னால் மலை வேம்பு அரசு, அத்தி, நிழல்வாகை ஆகிய மரங்களும் நிழலைக் கொடுத்து, கோவிலுக்குச் செல்பவர்களுக்குச் சோலையின் மத்தியில் உலவுவது போன்ற உணர்ச்சியை ஊட்டுகின்றன.

தமிழகத்தையாண்ட தமிழ் வேந்தன் செங்குட்டுவன், தமிழகத்திலே கண்ணகிக்கு விழாவெடுத்த வேளையிலே, அவ்விழாவிற் கலந்து சிறப்பிக்கச் சென்ற கடல் சூழிலங்கைக் கயவாகு மன்னன்,

ஈழத்தின் பலபாகங்களிலும் பத்தினித் தெய்வமாம் கண்ணகிக்குக் கோவில்களை அமைததான். இக்காலம் துவங்கியே பத்தினி வணக்கம் இலங்கையிலே பரவலாயிற்று.

காவலன் நெடுஞ்செழியன் நீதி தவறியதால், கோவலன் களத்தில் மாண்டான்; இதை யறிந்த கண்ணகி நீதியை நிலை நாட்டி, மதுரையைத் தீயூட்டி, தீத்திறத்தாரை ஒறுத்தாள் பின் இலங்கை போந்து, வற்றாப் பளை முதலிய திவ்விய ஸ்தலங்களிலும் இறுதியாக மாதனையிலும் கோயில் கொண்டருளினள். இதுவே தலவரலாறும் அம்பாள் பக்தர்களின் நம்பிக்கையுமாகும். இதைச்

"செந்திரு வளம்பெருகு மதுரையின் மனோன்மணி
சிறந்தகண் மேருமருவும்
திகழுமாங் கனியின்வந் தேபெரிய நாடுநற்
தேவதுறை தம்பாலையில்
சுந்தர மிகுந்தகன் ஞர்வயலி னேடுநற்
சுட்டிபுர மிரிசுவில்லில்
துவளிபா ணுவெட்டி அங்கணு மக்கடவை
நற்சுற்ற பன்றித்தலைச்சியில்
விந்தைசெறி அத்துளுவில் மந்திகையில் நிற்றாவில்
மிக்கமா னியவளையிலும்
மேவு திரியாயினும் கல்லிருப் பின்னரிய
மிக்கவற் றாப்பளையிலும்
வந்துவந் தேயிருந் தங்கு நிதமெனது
மனதினிற் குடிபுகுந்து
வற்றாத கிருபைதந் தேதுணைசெய் மாதனையில்
மருவுகண் ணகையம்மனே."

என்னும் பழம் பாடலால் அறியலாம்.

கண்ணகியின் வரலாறு பலவிதமாகப் பேசப்படுகின்றது. அவள் மாங்கனியிற் தோன்றிய அவதார நாயகியென்று கூறும் ஒரு சாரார், செந்திருவளம் பெருகு என ஆரம்பிக்கும் பாடலின் "திகழ மாங்கனியின் வந்தே பெரிய நாடு நற்" என்னும் அடியை ஆதாரமாகக் கூறுவர்.

பழமையும் புதுமைகளும் கொண்ட இக்கோவிலில், வெள்ளி, திங்கள், செவ்வாய்க் கிழமைகளில் விசேஷ பூஜை நைவேத்தியங்கள் நடைபெறுகின்றனவாயினும் வைகாசி விசாகத்தை அடுத்து வருகின்ற வருடாந்தப் பொங்கல் விழாவே அதி

விமரிசையாகக் கொண்டாடப் படுகின்றது.

பொங்கல் நாளுக்கு ஆறு நாட்களுக்கு முன்பு தொடங்கியே கண்ணகியின் கதை நாளும் பொழுதும் கோவிலிற் படிக்கப்படுகிறது. இக்கதை சிலப்பதிகாரத்தையொட்டியே எழுதப்பட்டுள்ளது. கல்யாணப் படிப்பு, மாதவி கூத்து சிலம்பு கூறல் முதலிய நிகழ்ச்சிகள் இனிய இசையிலே எளிய நடையிலே எழுதப் பட்டுள்ளன.

மாதவியின் நடன அரங்கேற்றத்துக்கான ஆயத்தங்களையும், ஆடரங்கின் அழகையும், அவளது ஆடற் திறத்தையும் ஆடல் பாடல்களின் இலக்கணங்களையும், இசைக் கருவிகளின் நயத்தையும கலையம்சம் கமழ எடுத்துக் கூறுவது மாதவி கூத்து.

மாநாய்கன், மாசாத்துவான் என்னும் வணிகர்களின் குலச் சிறப்பு, தனச் சிறப்பு, கண்ணகி கோவலன் கலியாணத்துக்காகச் செய்த ஏற்பாடுகள், மணப்பந்தரின் மாண்பு, அவர்கள் அணிந்த ஆடையாபரணங்களின் அழகு, மணவினையைக் காணவந்த மக்களின் மனப்பாங்கு முதலியவற்றை எழில் ததும்பக் கூறுவது கல்யாணப் படிப்பு.

துன்பத்தின் சாயல் சிறிதுமின்றி நடைபெற்ற கண்ணகியின் வாழ்க்கையிலே, கண்களைக் குணமாக்கும் சம்பவங்கள் ஏற்படுகின்றன. இத்துன்ப நிகழ்ச்சிகளைத் தொகுத்துக் கூறுவது சிலம்பு கூறல். இக்கதை ஆரம்பித்து முடியும்வரை உணர்ச்சிகரமாக அமைந்துள்ளது. கணீர் கணீரெனக் காற்சதங்கையொலிக்க, கலீர் கலீரெனக் காந்தட் கைவளை குலுங்க, வெளியன்ன தோரிடை எழிலுடன் துவழ, மாதவி நடனமாடும்போது, இசையில் மயங்கி மகிழ்பவர்கள் கோவலன் வெட்டுண்டு இறக்கும்போதும், அது கேட்ட கண்ணகி நிலத்தில் வீழ்ந்து அரற்றும் போதும சோகத்தின் எல்லைக்கே சென்று விடுகின்றனர்.

இக்கோவிலின் பொங்கற் திருநாளன்று, அதிகாலையிலே ஆறு புதுப்பானைகளில் வளந்து கட்டி பொங்கல் பொங்குகின்றனர். கோவில் தர்மகர்த்தாக்களே முதலில் பொங்குவர். அதன் பின்பே ஏனையோர் பொங்கல் செய்வர்.

இந்நாளில் பக்தர்கள் கூட்டங்கூட்டமாய்த்திரண்டு கோவிலுக்குச் செல்வர். தங்கள் மனக்குறைகளையும் பிணிகளையும பற்றித் தவிக்கு முறையிட்டு, கண்மலர் பால் நெய் முதலியவற்றைக்கொடுத்துத் தங்கள் நேர்த்திக் கடன்களைப் பூர்த்தி செய்வர்.

சுற்றுடலிலுள்ள பல கோவில்களிலிருந்து, கரகம் காவடிகள் இங்கு வந்தடையும். உடவில் நோவை வரவழைக்கக்

கூடிய—உடலை வருத்தி நேர்த்திக் கடன்களைப் பூர்த்தி செய்யும் வகையில், தேகத்தில் நூற்றுக் கணக்கான செடில்களைக் குத்தி எடுக்கப்படும் செடில் காவடிகள், தூக்குக் காவடிகள், முள் மிதியடியில் நடந்து எடுக்கப்படும் காவடிகள், பூங்கரகம் பொற்கரகம் முதலியன கணக்கின்றி வந்தடைகின்றன.

இவ்வூரின் வடபால் அமைந்துள்ள முருகன் ஆலயம், கண்ணகி கோவிலிலிருந்து சுமார் 400 யார் தூரத்திலுள்ளது.

''மாலும் அயனும் அறியாதவனே
காலம் யாவையும் கடந்தாய் சுதனே
வள்ளிமணவாளனே 'வலா வேலையா — நீ
புள்ளிமயிலேறிவா வேலா வேலையா''

என்பது போன்ற நவீன பக்திப் பாடல்களுடன் இம் முருகன் சன்னிதியிலிருந்து எடுக்கப்படும் கரகங் காவடிகள் கண்ணகி கோவிலுக்குச் செல்லும்.

கண்ணகி கோவிலுக்குப் பின்புறமாக சுமார் 50 யார் தூரத்தில் ஒரு விநாயகர் ஆலயம் உள்ளது. எக் கருமத்தையும் ஆரம்பிக்கும்போது முதலில் விநாயகனை வணங்குவது தமிழருடைய வழக்கம். இக்கண்ணகி கோவிலுக்குச் செல்பவர்களும் முதலில் விநாயகனையே வந்திக்கின்றனர். முதுகு,மார்பு, நா முதலிய உறுப்புக்களில் செடில் குத்திக் காவடி யெடுப்பவர்களுக்கு, சுட்டுப் பொசுக்கும் வெயிலில் கால்கள் கொப்பளிக்க ஊர்வலமாக வந்து இவ்விநாயகராலயத்தை வந்தடைந்ததும் புதிய களையும் புதிய உற்சாகமும் பிறக்கும்.

தங்களின் இலக்கான கண்ணகி கோவிலைச் சேர—தங்கள் நேர்த்திக் கடன்களைப் பூர்த்தி செய்ய இன்னும் சிறிது தூரமேயுள்ளது என்பதனாலும், அதற்குரிய ஊக்கத்தையும் அருளையும் விக்கினங்கள் விலக்கும் விநாயகன் நிச்சயமாக அருள்வான் என்று நம்பித் துதிப்பர். இங்கிருந்து அனைவரும் சிறிது நேரத்திலேயே கண்ணகி கோவிலை அடைகின்றனர். பக்தர்கள் பலப்பல பெயர்களால், பலப்பல பாடல்களால் அம்பாளைத் துதிப்பர். இத்தேவியின் அருள் கிடைத்தால் மழை பொழியும், பால் சொரியும், தேன் பாயும், இருள் மறையும், ஒளி பிறக்கும் என்றெல்லாம் நம்புகின்றனர். இந்த நம்பிக்கையை உறுதிப்படுத்து முகமாகவே இவர்கள்

''பத்தினியாள் போற இடம் தாயே முத்துமாரி
பட்டமரம் பால் சொரியும் தாயே முத்துமாரி

உண்டு என்பார் வாசலிலே எங்க முத்துமாரி
ஒளிவிளக்காய் நின்றெரிவாய் எங்க முத்துமாரி"

என்று பாடித்துதிப்பர். இப்பாடல்கள் மகாகவி பாரதியாரின் ''உலகத்து நாயகியே எங்க முத்துமாரியம்மா'' என்ற பாடலை ஞாபகப்படுத்துவது கவனிக்கத் தக்கது. பக்தர்கள் தங்கள் காணிக்கைகளைச் செலுத்தி, நேர்த்திக் கடன்களைப் பூர்த்தி செய்ததும், அந்தி வேளையிலே, கொடிமரத்துக்குப் பக்கலிலே ஆடு, கோழி முதலியன நேரப்பட்டு, அண்மையிலுள சிறு மயானத்துக்குச் சென்று வழி வெட்டி விடப்படுகிறது. வழி வெட்டுதல் என்பது. சில பாவனைகளை வெளிப்படுத்தும் ஒரு கிரியையே. உயிர் நீங்கிய—எதற்கும் உதவாத உடலை மயானத்தில் எரிப்பதுபோல, பாதகங்களைச் செய்யத் தூண்டும் தீய ஆசைகள், போட்டி பொருமை, வஞ்சகம் முதலிய கொடிய எண்ணங்கள், பிணிகள் முதலியவற்றை அகற்றுவதாக நம்பும் சடங்கு என்று கொள்வதே பொருந்தும். இச்சடங்கு முடிந்ததும்' இறுதிப் பூசையின் பின் பொங்கல் விழா இனிது நிறைவெய்துகின்றது. அம்பாளின் அருட்பிரசாதத்தைப் பெற்ற மகிழ்வுடனும், மன நிறைவுடனும் வீடு சென்று பொங்கலையுண்டு மகிழ்வர்.

வேதனை தீர்த்திடும் மாதனை கண்ணகியின் அருளைப் பெற பருத்தித்துறையின் பல பகுதிகளிலிருந்தும், மந்திகை, நெல்லியடி, அச்சுவேலி, கோப்பாய், திருநெல்வேலி, சங்கானை முதலிய இடங்களிலிருந்தும் மக்கள் தொகையாகக் குவிகின்றனர். இவ்வாறு வருகின்ற பக்தர்களுக்கு அருளைப் பொழியும் தேவி, இவ்வூர் மக்களுக்கு வேதனைகளைத் தீர்த்து, அவர்களின் வாழ்வில் நல்லொளியைக் கொடுத்துக் காத்து வருகிறாள்.

இத்தாயின் – ஆலயத்தைப் பேணி – புகழைப் பாடி – பாதங்களைப் பணிந்து – சேவை செய்வதே எமது தலையாய கடமையாகும்.

---

''ஒருவன் சினத்தை அன்பினால் அடக்கி ஆளவேண்டும்; தீமையை நன்மையினால் வெல்ல வேண்டும்; ஈயாமையைத் தாராளப் பண்பினால் வெல்ல வேண்டும்; பொய்மையை வாய்மையால் வெல்ல வேண்டும்.''

— கௌதம புத்தர்

---

# பழமை வாய்ந்த ஈழத்திற்குப் புதுமை தந்தது மாதனை நகரே!

— செல்வ - சட்டநாதர் —

**இவ்வூர் மக்களின் வருணச் சிறப்பு:—**

இறைவன் மக்களை நான்கு வருணங்களாக வகுத்தான், இதனை அவனே கீதையில் பார்த்தனுக்கு,

> "ப்ராஹ்மண க்ஷத்ரியவிசாம் சூத்ராணும் ச பரந்தப
> கர்மாணி ப்ரவிபக்தானி ஸ்வபாவப்ரபவைர் குணை"

என்ற சுலோகத்தின் மூலம் கூறுகிருன். அதாவது, " பிராம்மண, க்ஷத்திரிய, வைசிய, சூத்திரன் என்ற நான்கு சாதியை அவர்களின், கர்மத்திற்கேற்ப நான்" வகுத்துள்ளேன் என்பது இதன் பொருள். இவற்றுள் அடக்கம், தவம், தூய்மை, பொறுமை நேர்மை, சுபானுபவஞானம், ஈசுவர நம்பிக்கை ஆகியவற்றில் பற்றுடையவராய், சகல சாஸ்திர நூல்களையும் கற்றுத் தெளிந்தவர்கள் பிராமணராவார். இவ்வாறு இறைவனுல் வகுக்கப்பட்ட வருணப்பாகுபாட்டையே, மனுஸ்மிருதியும் வலியுறுத்துகிறது. மேலும் இம் மிருதி பிராமணருக்கு முதன்மை கொடுத்து, அவர்களை இரு பிறப்பாளர் என்றும் வருணிக்கிறது. இவ்வருணத்தாரைப் பார்ப்பனரென்றும், ஆச்சாரியரென்றும் (ஆசாரியர்) குறிப்பிடும் வழக்கம் நிலவுகிறது. இப் பிராமணர்களில் ஒரு பகுதியினர் தாம் கற்ற கல்வியைக் கொண்டு, வேள்வியாற்றி அவற்றினுல் ஊதியத்தைப் பெற்றுக் காலத்தைக் கழித்தனர். அவ்வாறு பொருள் பெறுவதைத் தமக்கு இழிவென கருதிய ஒருபகுதிப் பிராமணர் உலக ஆக்கத்திற்கு வேண்டிய பொருட்களைப் படைத்தனர். இவர்களே விசுவப் பிராமணர் என அழைக்கப்பட்டனர். விசுவம்: உலகம். விசுவபிராமணர்கள் முறையே கொல்லர், தச்சர், தட்டார், சிற்பி, கன்னர், என்ற பஞ்சகம்மாளரைக் குறிக்கும்.

விசுவப் பிராமணர்கள் வேள்வி இயற்றுது படைத்தற்றெழில் புரிந்தமையால் "வேளாப் பார்ப்பார்" என வழங்கப்பட்டனர், "கொல்

லர்" என்பதும் இவ் வேளாப் பார்ப்பாரையே குறிப்பதாகும். கொல்லர் என்ற சொல் பொதுவாகக் கூறும்போது இரும்பு வேலை செய்யும் கருமாரையே குறிக்கும். ஆனால் பொன் போன்ற அடைமொயோடு புணர்ந்து (இணைந்து) பொற் கொல்லர் என்று அழைக்கப்பட்டால், அவ்வடைக்குரிய தொழிலாளரை உணர்த்தும் என்பது கவனிக்கப் பாலது. இன்று கருமாரே இவ்வூர் வாசிகளில் பெரும் பான்மையோர் என்பது குறிப்பிடத் தக்கது. சொற்றொழில் மேற்கொண்ட பார்ப்பனக் குலத்தவர் முன்னாளில் ஓய்வு நேரத்தில் சங்கறுத்து. அழகிய வளையல்களைச் செய்தனரென அறியக் கிடக்கிறது. ஆனால் சங்கறுப் போரை வேறு ஒரு சாதியினர் என்று குறிப்பிடுவது பொருத்தமற்றதாகும். இத்தொழிலை மேற்கொண்டவர்கள் கொற்றொழில் செய்யும் வேளாப் பார்ப்பனர் என்பதை

"வேளாப் பார்ப்பான் வாளரந் துமித்த
வளைகளைந் தொழிந்த கொழுந்து"

என்ற அகநானூற்றுச் செய்யுள் வலியுறுத்துகிறது. இம்மரபில் வந்தவர்களில் ஒருவரே நக்கீரர் என்று கொள்வதற்கு ஆதாரமாய் நிற்பன 'கொங்கு தேர் வாழ்க்கை' என்னும் செய்யுட் பொருள் பற்றி, இறையனார்க்கும் நிகழ்ந்த சொற்போரில் இறைவன் நக்கீரரை நோக்கி,

"அங்கங் குலுங்க அரிவாளின் நெய்தடவிப்
பங்கம் படவிரண்டு கால்பரப்பிச் – சங்கதனைக்
"கீர் கீர்" எனவறுக்கும் கீரனோ என்கவியை
ஆராயும் உள்ளத்தவன்?"

என்று கூறியதில் இருந்து நக்கீரர் 'வேளாப்பார்ப்பான்' என்பது தெளிவாகிறது. இப்பார்ப்பானர் இரும்பையோ, சங்கையோ வாளால் அறுக்கும்போது 'கீர் கீர்" என்று ஓசை பிறக்கின்றமையால், தமது குலம்பெருமையை வெளிப்படுத்தக கருதி, தமக்குப் பிறக்கும் குழந்தைகளுக்கு 'கீரன்' என்ற அடையைச்சேர்த்துப்பேரிடும் வழக்கத்தைக்கைக் கொண்டனர். இதற்கு அபபாட்டுள்'கீர் கீர்' என அறுக்கும் கீரன் என்று வரும் தொடர் அப்பேரின் காரணத்தை நிலை நாட்டுகிறது. இவ்வேளாப்பார்பாரில் அநேகர் சங்கப்புலவர்களாய் விளங்கினர். இவர்களில் 'மோசி கீரனாரும்' ஒருவராவார் இவர் புலவர் குழுவால் போற்றத்தக்க பெற்றி வாய்ந்தவர்.



M. SATKUNAM, M. A.

"மன்ன னுயிர்த்தே மலர்தலை யுலகெனப்
பேசிய புலவர் மோசி கீரனார்
புலத்திறம் தெரிந்து புகலுவம் சிறிதே."

எனப் பாடி அவரைப் பெருமைப்படுத்துகிறது புலவருலகம். கொற்றொழில் புரியும் பார்ப்பனர் தமக்கு வழங்கிவரும் கீரன் என்ற அடையோடு, தமது தொழிலைக் குறிக்கக் 'கொற்றன்' என்ற அடையையும் சேர்த்து வழங்கி வந்தனர். இதற்குக் குறுந்தொகையில் ஒரு செய்யுள் செய்த 'படுமாத்து மோசி கீரன் கொற்றன்' என்று வரும் புலவரின் பெயர் சான்று பகருகிறது. இரும்புத் தொழிலை மேற்கொண்ட இப்பார்ப்பார் இரும்பு போன்றுநெஞ்சுரம் படைத்தவர்கள். எச் சந்தர்ப்பத்திலும் தாம் கண்ட உண்மை நிலை நிறுத்தும் பெற்றி வாய்ந்தவர்கள். இறைவனாகிலும் செய்யும் தவறை, எதுவித தயக்கமுமின்றி அவனிடத்து அஞ்சாது கூறும் உள்ளப்பாங்கமைந்தவர்கள். ஒருகால் இறைவன் இவ்வினத்தவரான, நக் கீரனாரையும் அவரது குலத்தையும் ஏளனப் படுத்தினர் அதைக் கேட்டு வெகுண்ட நக்கீரர்,

"சங்கறுப்ப தெங்கள்குலம், சங்கரனார்க் கேதுகுலம்?
பங்கமுறச் சொன்னாற் பழுதாமோ?— சங்கை
அரிந்துண்டு வாழ்வோம்; அரனாரைப் போல
இரந்துண்டு வாழ்வ தில்லை.

என்று எதிருரைத்து இறைவனைப் பழித்தார். இவற்றைக் கொண்டு நாம் இப்பார்ப்பனரது மனவுறுதியை நன்கு அறியக் கிடக்கிறது. சங்ககாலத்தில் முதன்மையுடைய புலவர்களாக விளங்கி,இயற்றமிழுக்கு ஏற்றம் கொடுத்த வேளாப்பார்ப்பார் இசைத் தமிழிலும் நாடகத் தமிழிலும் மிக்கு விழுமி விளங்கினார்கள் என்பதை அவர்களின் வரலாற்றை ஈண்டு நோக்கப் புலப்படும்.

**இவ்வூர் மக்களின் மூதாதையோர்-:**

இவ்வூரில் வாழும் வேளாப் பார்ப்பாரினது ஆதிக் குடிகள், தென்னிந்தியாவிலுள்ள திருநெல்வேலி ஜில்லாவில் இருந்து வந்தவர்களாவார்கள். இப் பார்ப்பனர் மிக்க வைதீக ஒழுக்கம் வாய்ந்தவர்கள்; இவர்கள் ஓதற் பார்ப்பனர்கள். மற்றும் வருணத்தாரிடத்து தானம் பெறுவதை வெறுத்ததோடு. அவர்களைத் தங்கள் ஆலயங்களில் குருக்களாக அமர்த்துவதையும்

விலக்கினர். பின்னர் தாமே வேதாகமங்களைக் கற்றுத்தெளிந்து— தீட்சைபெற்று— முப்புரிநூல் அணிந்து; தமது திருக்கோவில்களில் குருக்களாகவும், தம் இல்லங்களில் நிகழும்திருமணம் மனைபுகுதல் போன்ற வைபவங்களுக்கு வேண்டிய சடங்குகளையும், தாமே ஆற்றி வந்தனர் இம் முறை இன்னும் திருநெல்வேலிப் பகுதியிலுள்ள 'வேளாப் பார்ப்பார்' கைக்கொண்டு வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. இவ வேளாப்பார்ப்பாரில் ஒரு பகுதியினர் இலங்கை அரசனும், பிரமாவின் பாட்டனுமான இராவணேஸ்வரன் வேண்டியமையால் இவ் ஊரில் தங்கினர். இம்மக்களில் இன்னும் பெருபான்மையோர் தங்கள் மூதாதையர் போன்று மாமிசம் புசிக்காது— தீட்சை பெற்று— முப்புரி நூல் அணிந்து மிகவும் வைதீக முறையில் வாழ்ந்து வருகின்றனர். அவர்களின் ஆசாரத்தன்மையைப் போற்றிய அறிஞர் உலகம் இன்று அவர்களை 'ஆசாரியார்' என்று வழங்கி வருவதை நாம் காணலாம்.

**இலங்கையினதும் இவ்வூரினதும் பூர்வீகம்:—**

முன்னாளில் சிவனும் உமாதேவியும் அளித்த வரத்தினால் 'சுகேசன்' என்ற அரசன் விண்ணுலகத்திலும் வளமிக்க ஒரு நகரத்தில் தேவேந்திரன் போல வீற்றிருந்தான். சுகேசனுடைய சிறப்புக்களைக் கேள்வியுற்ற ஒரு கந்தருவன் தனது மகளான 'தெய்வவதியை' அவனுக்கு மணம் செய்துவைத்தான். அவர்களுக்கு மாலியவான், சுமாலி, மாலி என்னும் மக்கள் மூவர் பிறந்தனர். அவர்கள் ஆற்றிய தவத்தினால் மிக்கவலிமையுடையவராக விளங்கினர். இவர்கள்;

''நீடுபுவன மொருமூன்று மயனுஞ் சிவனு நெடு மாலும்
கூடிய மரின் முயன்று லுங்குறுக வரிய வரணின் தாய
ஆடலமரர்பதி யிழை கழிக்கு நகரியமைக் கடவுவ
நாடு நல்லோயென வுரைப்ப நன்றென்றவன்போய்
நாடுவான்''

அதாவது, முத்தேவரால் வெல்ல முடியாததும், அமராவதி, அளகாபுரி முதலியவற்றிலும் செல்வம் மிக்கதான ஒரு நகரைத் தமக்கு அமைத்துத் தரும்படி தேவசம்மியனை மயனை வேண்டினர். அதற்கிணங்கிய விசுவகர்மா தனது உறவிரான பஞ்சகம்மாளரோடு முன்னொரு காலத்தில் மேருமலையில் இருந்து வாயுதேவனால் பெயர்த்தெறியப்பட்டுத், தென்கயலில் இருக்கும் சிகரத்தை அடைந்து— அவற்றை மட்டப்படுத்தி அங்கு உயர்ந்த கோட்டையும், மாட மாளிகைகளும் அமைத்து, அந்நகருக்கு 'இலங்காபுரி' என்று பெயரிட்டான்

"இன்னதாய விலங்கையின தெழிலை நோக்கி யெதிரில்லா
மன்னுவீர பாலியவான் சுமாலிமாலி யென்று ரைக்கும்
மன்னர் மூவர்மகிழ்ந்துவ் வாசாரியற் குப்பூசனை செய்
தொன்னலார் களிடந்துடிப்ப வொளிநீரி லங்கையுட்
புகுந்தார்"

இவ்வாறு அழைக்கப்பட்ட இலங்காபுரியின் எழிலைக்கண்ட மன்னர் மூவரும் களிப்படைந்தனர். விசுவகன்மாவுக்கும், அவருடன் வந்த ஆசாரியருக்கும் தக்க வழிபாடுகளைச் செய்தனுப்பியபின், இலங்கையினுள் குடி புகுந்தனர்.

பின்னர் அநுமானுல் இலங்காபுரி சிதைக்கப்பட்டு — அழகு குன்றி இருப்பதைக் கண்ட தசக்கிரிவன், தனதுமாமனுகியமயனை அடைந்து. இந் நகரைப் புதுப்பித்துத் தரும்படி வேண்டினுன். மருகனின் வேண்டுகோளுக்கிணங்கிய மயன், தனது சுற்றத்தவரான காஞ்சியிலும், திருநெல்வேலியிலுமுள்ள வேளாப் பார்ப்பனரோடும்.

"பூவரும் அயனொடும் புகுந்து பொன்நகர்
மூவகை உலகினும் அழகு முற்றுற
ஏவினை இயற்றினன் "கணத்தின்" என்பரால்
தேவரும் மருள்கொள தெய்வத் தச்சனே"

இவ்வாறு முன்னையிலும் அழகாக அமைத்தனர் அந்நகரின் எழிலைக் கண்டு மிகுந்தவியப்படைந்த தசமுகன் நான்முகனுக்குத் தக்க மரியாதை செய்தனுப்பிய பின் உறவினரான பஞ்சகம்மியரை அரண்மனையில் அமர்த்திப் பல உபசாரங்களைச் செய்தான். அவ்வமயம் இலங்கையில் வல்லிபுரப் பகுதியில் வந்திறங்கிய இராம – லஷ்சுமணரும் குரங்குப்படையும் அங்குள்ள விஷ்ணு ஆலயத்தைத் தரிசித்துவிட்டுத் தாம் தங்குவதற்கு ஏற்ற இடத்தை நாடிப் புறப்பட்டனர். அவ்வாறு சென்ற இலஷ்மணன் சோலைப் பாங்கமைந்த ஒரு குன்றையடைந்து, அங்கு 'நளன்' என்பவனின் உதவியோடு பாடி வீடுகளை அமைத்து அவ்விடத்திற்கு 'இலட்சுமணன் தோட்டம்' என்ற பெயரை வைத்தான். இலட்சுமணன் தோட்டத்தில் இராமப்படை தங்கியிருப்பதை ஒற்றர்களாகிய 'சுகன்', சாரணன் என்பவர்களால் அறிந்த இலங்கேஸ்வரன், இராம படை நகருள் புகாவண்ணம் தடை செய்யுமாறு, அரண்மனையில் தங்கிய வேளார்ப் பார்பாரை வேண்டினுன். இதற்கிசைந்த அவர்கள் இலட்சுமணன் தோட்டத்தின் மருங்கில் ஓரிடத்தில்

பாடி வீடுகளை நிறுவியிருந்த தோடு, மழு, கதை, சக்கரம், வாள் சத்தி, வேல், சூலம் கோடாரி, அங்குசம், தோமரம், மார்புக்கவசம் போன்ற போர்க் கருவிகளைச் செய்து குவித்தனர். நகரத்தின் வெளியிலிருந்து கோட்டையின் உள்ளிடம் வரையும் காவலாளர்களை அமர்த்தினர். மேற்கோட்டைச் சுவர்களின் உச்சியில்பகைவர்களைத் தாக்குவதற்கேற்ற பலவகையான பொறிகள் உருவாக்கித் தக்கவிடத்தில் அமைத்துப் பாதுகாத்தனர்.

இவர் தங்கியவிடத்தில் 'வேளாளரை' அமர்த்தி நெல் உற்பத்தி செய்வித்ததோடு, அவ்வயலுக்குத் தமது பழைய உறைவிடமாகிய திருநெல்வேலியின் பெயரமைய நாமமிட்டனர். திருநெல்வேலியை திரு + நெல் + வேலி என்று பிரித்தால் திரு — அழகையும், நெல் — நெல்லையும் வேலி — எல்லையையும் குறிக்கும். அதாவது அழகிற்கும் நெல்லுக்கும் எல்லையாக விளங்குமிடம் என்பது பொருள். இப்பெயரைத் தழுவியே தங்கிய வயலுக்கு 'மாதனைவயல்' என்ற நமத்தைச்சூட்டினர். மா—அழகு, தனை—எல்லை, வயல்—நெல்விளையும் களனி என்பதாகும். இப்பேரே இன்று இவ்வூரவரதுமூதாதையோரின் ஆதி உறைவிடம், திருநெல்வேலி என்பதை நிலைநிறுத்தி வருகிறது. இப் பகுதி இன்று பசுமை குன்றி வரண்ட பாலை நிலப்பகுதி போன்று காட்சி தருகிறது. இங்கு தங்கிய வேளாப் பார்ப்பார், இதன் மருங்கிய படைப்புச் செயயும் தம் உறைவிடம் மற்றையோர் வியக்கும்வண்ணம் அமைத்து, அந் நகருக்கு அழகிற்கு எல்லை என்ற பொருள் விளங்க 'மாதனை' என்ற பெயரை வைத்தனர். அங்கே மாட மாளிகைகள், கூட கோபுரங்கள், உப்பரிகைமேடை, ஓவிய மண்டபங்கள், அத்தாணி மண்டபங்கள், நாடகசாலைகள், இசைக்கூடங்கள், ஆயுதசாலைகள், மலரோடைகள், பூம்பொழில்கள் என்பன அமையப்பெற்று அதன் பேருக்கமைய அணி செய்தன. அங்கமைந்த பண்டகசாலையில் பொன்னும் முத்தும், மணியும் ஏரதளமான உணவுப் பொருள்களும் நிறைந்திருந்தன. இந்நகரின் எழிலைக் காண விரும்பிய ஸ்ரீராமன் இலட்சுமணன் தோட்டத்திலமைந்த குன்றில்.

'' அருந்ததி அனைய நங்கை அவ்வழி இருந்தாள் என்று
பொருந்திய காதல்தூண்ட, பொன்நகர் காண்பான் போல
பெருந்துணை வீரர் சுற்ற, தம்பியும் பின்பு செல்ல
இருந்தமால் வரையின் உச்சி ஏறினன் இராமன் இப்பால் ''

இவ்வாறு சிகரத்தை அடைந்த இராமன் அந்நகர் அழகை கண்டு மயங்கி அதன் சிறப்பை இலட்சுமணனுக்கு-



M. SATKUNAM, M. A.

"நம்திரு நகரே ஆதி வேறுஉள நகர்கட்கு எல்லாம்
வந்தபேர் உவமை கூறி வழுத்துவான் அமைந்த காலை
இந்திரன் இருக்கை என்பர்; இலங்கையை எடுத்துக்
காட்டார்
அந்தரம் உணர்தல் தேற்றார், அருங்கவிப் புலவர் அம்ம!"

என்று கூறி இந்நகரின் எழிலை வியக்கின்றான். இத்தகைய திரு நகரில் அமைந்த சகல கட்டிடங்களும் மற்றும் சோலை, வாவி களணி முதலியனவும் இராம—இராவண யுத்தத்தின் போது, இந்நகரின் அழகைக் கண்டு அழுக்காறு கொண்ட குரங்குப் படையால் அழிக்கப்பட்டது. யுத்தம் முடிந்தபின்னர் வேளாப் பார்ப்பார் மீண்டும் இந்நகரை சீர்திருத்திக் குடி புகுந்தனர். ஆயினும் முன்னைய செழிப்பு இந் நகரிலின்மையால் வேளாப் பார்ப்பாரில் ஒரு சில கருமாரும் [கருங்கைகொல்லர்] மற்றும் கஞ்சகாரரும், மரங்கொல், தச்சரும் பொன் செய் கொல்லரும், சிலை வடி சிற்பியும் ஆகியோர் பிழைப்பின் பொருட்டு இங்கிருந்து வெளியேறி, இலங்கையின் பல பாகங்களில் குடியேறினர், இங்கிருந்து புறப்பட்டவர்களில் குறிப்பிடத்தக்க வேளாப்பார்ப் பார் யாழ்ப்பாணத்தின் மருங்கில் ஒருபகுதியைத் தேர்ந்தெடுத்து இவ்விடத்திற்குத் தமது மூதாதையோர் ஆதியுறைவிடமான 'திருநெல்வேலி' என்ற பெயரையிட்டு வாழ்ந்து வருகின்றனர்.

**தெய்வவழிபாடு :-**

இவ்வூர் மக்கள் தெய்வவழி பாட்டில் மிக்க நம்பிக்கையுடையவர்கள். இவர்களின் குல தெய்வம் வீரபராசக்தியாகும், அத்தெய்வம் எப்போதும் தமது கொற்றொழிலைச் சித்தி பெற உதவுவதால் அத்தெய்வத்திற்கு 'கொற்றவை' என்ற நாமத்தைச் சூட்டி வழிபட்டனர். இவர் எக்கருமத்தைச் செய்ய முற்படுகின்ற போதிலும்— அத் தெய்வத்தை வணங்கி-அவளின் அனுக்கிரகத்தைப் பெற்றே கருமாற்றுவர். அத் தெய்வம்:

"...... ..கச்சுட முலைச்சி
வளையுடைக் கையிற் சூல மேந்தி
கரியின் உரிமை போர்த்தணங் காகிய
சிலம்பும் கழலும் புலம்புஞ் சீறடி
வலம்படு கொற்றத்து வாய்வாட் கொற்றவை"

இத் தன்மையுடையவளாய் காட்சிகொடுத்து தனது அடியாரிடத்து அருள் புரிவன், பிற்காலத்தில் இத் தெய்வத்தை

யே 'துர்க்கை' என்றும் 'காளி' என்றும் அழைத்தனர். காளியிடத்து வேளாப்பார்ப்பார் கேட்கும் வேண்டுகோள் மிகவும் சிறந்த இலட்சியங்களைக்கொண்டதாக அமைந்திருந்தது. இவர்கள் நல்லறிவும் உள்ளமைதியும் அடைதலே நோக்கமாக வழிபாடு செய்தனர். இவர்கள் காளியை நோக்கி:

"...... யாமும் இரப்பவை
பொருளும் பொன்னும் போகமும் அல்ல, நின்பால்
அருளும் அன்பும் அறனும் மூன்றும்"

என்று வணங்கினர். அதாவது "தாயே! யாங்கள் உன்னிடத்தில் எதிர்பார்ப்பவை பொருளும் பொன்னும் போகமுமல்ல; அருளும் அன்பும் அறனும் என்னும் தெளிந்த உணர்வுகளே யாம்" என்பது அவ்வரிகளின் கருத்து. இவற்றைக் கொண்டு அக்காலத்து வேளாப்பார்ப்பார் உணர்வுத் தெளிவைப் பெறுவதற்காகவே தெய்வ வழிபாடு செய்தனர் என்பது தெரிய வருகிறது. இவர்களால் அமைக்கப்பெற்று இவ்வூரில் விளங்கும் காளிகோவில் மிகவும் பழமை வாய்ந்தது. தேவியின் மூர்த்திகரத்தை அறிந்த ஏராளமான மக்கள் அந்நாளில் இங்கு வந்து றைந்து— அவளின் அனுக்கிரகத்தைப் பெற்று — நோய், பிடை, பிணி என்பவற்றிலிருந்து குணமடைந்தனர். பகல் வேளைகளில் ஏராளமானோர் இங்குவந்து கூடுவதால் அம்மக்களின் சுவாத்தியத்தைக் கருதி இற்றைக்கு அறுநூறு ஆண்டுகளுக்கு முன் இக்கோவிலின் முன்றில் நாட்டப்பட்ட வேப்பமரம் இன்று பெருவிருட்சமாய்ப் பரிணமித்திருப்பதைக் காணலாம். இவ்வூரவர்கள் 'காளியை' வழிபடுவதுடன் இம் மரத்தையும் வணங்கி வந்தனர். ஆனால் போர்த்துக்கேயர் ஒல்லாந்தர் இலங்கையைக் கைப்பற்றிய போது, இக்கோவில் அவர்களின் பாதிப்பால் சிதைக்கப் பட்டுக் காட்சி கொடுத்தது. பின்னர் இற்றைக்கு இருநூறு ஆண்டுகளுக்கு முன்னர் இவ்வூரில் வாழ்ந்த மக்களிற் சிலர் மீண்டும் இக்கோவிலைப் புனருத்தாரணம் செய்து ஆதரித்து வந்தனர். இன்று ஆக்க பூர்வமான கட்டட வேலைகள் நடைபெற்று வருகின்றன. முன்னாளில் இவ்வூரிலிருந்து வெளியேறிய வேளாப்பார்ப்பனர் தாம் குடிபுகுந்த விடங்களில் குலதெய்வமாகிய காளிதேவிக்கு கோவில் நிறுவியதோடு கோவில் முன்னிலையில் வேப்பமரத்தை நாட்டி வழிபடுவதை இன்று காணலாம்.

அந்நாளில் தேவாலயங்கள், அரண்மனைகள் நிறுவுதற்கும், போர்க்கருவி, இசைக்கருவி, போர்ப் பொறிள், வானவூர்தி போன்ற உண்ணுணர்வு இயந்திரங்கள் உருவாக்குதற்கும் அர

சர்கள் அரண்மனையில் இவ் வேளாப்பார்ப்பனரை அமர்த்தி உபசரித்து வந்தனர். இவர்களில் பெருங்கொல்லனார், இளைய கம்மியன், கொற்றன் சிதப்பராச்சாரி, காளிதாசகிரன், கொற்றப் பெருவளவன் எனப்போர் குறிப்பிடத்தக்கவர்கள். சேரன் செங்குட்டுவன் தெய்வீகமுற்ற கண்ணகிக்குக் கோவிலமைத்து விழா கொண்டாடினன். அவ் விழாவுக்கு அயல்நாட்டு மன்னர்களுக்கு அழைப்பு விடுத்தான். அவ்வழைப்பை ஏற்ற "கடல்சூழ் இலங்கைக் கயபாகு மன்னன்" இவ்விழாவில் கலந்து கொண்டான். கண்ணகிபால் பக்தி கொண்ட கயவாகு அப்பத்தினிக்கு ஈழத்தில் ஆலயங்கள் நிறுவவும் அக்கோவில்கள் இந்தியப் பாணியில் அமைந்திருக்க வேண்டுமென விரும்பியதாலும் இந்தியாவிலுள்ள தலங்களைக் காட்டுவதற்காகத் தனது அரண்மனையிலுள்ள வேளாப் பார்ப்பார் ஐவரையும் உடன் அழைத்துச் சென்முன். பதினென் கண்ணகிச் சிலைகளுடன் ஈழம் திரும்பிய மன்னன் தன்னுடன் வந்த வேளாப் பார்ப்பார் ஐவரிடம் கொணர்ந்த சிலையைக் கொடுத்து ஆலயங்கள் நிறுவும்படி பணித்தான். வேளாப் பார்ப்பார் தேவதுறை, தம்பாலை, கன்ஞர்வயல், சுட்டிபுரம் மிருசுவில், துவளி, பாணுவெட்டி, அங்கணுமக்கடவை, பன்றித்தலைச்சி, அத்துளுவில் மந்திகை நிற்றூவில் மானியவளை, திருளாய் கல்லிருப்பு, வற்ருப்பளை ஆகிய பதிறு கோவில்களையமைத்த பின்னர். இருந்த இரு சிலைகளில் ஒன்றிற்குக் கண்டியில் ஆலயம் அமைக்க வெண்ணி

> "அறக்களத் தந்தணர் ஆசான் பெருங்கணி
> சிறப்புடைக் கம்மியர் தம்மொடுஞ் சென்று
> மேலோர் விழையும் நூல்னெறி மாக்கள்
> பால்பெற வகுத்த பத்தினிக் கோட்டத்து"

அமைத்த எழில் மண்டபத்தில் ஒருசிலையை அமைத்துச் சிறப்புறச் செய்தான், பின் ஈழமெங்கும் கண்ணகிக்குக் கோவில் நிர்மாணித்தளித்த வேளாப்பார்ப்பாரில் ஒருவனை 'கொற்ற சிதப்பராச்சாரி' தனது ஊரான மாதனையில் தனக்குரிமையான நிலத்தில்

> "இமையவர் உறையும் இமையச் செல்வரைச்
> சிமையச் சென்னித் தெய்வம் பரசிக்
> கைவினை முற்றிய தெய்வப் படிமத்து
> வித்தகர் இயற்றிய விளங்கிய கோலத்து
> முற்றிழை நன்கலம் முழுவதும் பூட்டிப்
> பூப்பலி செய்து காப்புக்கடை நிறுத்தி

வேள்வியும் விழாவும் எடுத்து கயபாகு மன்னனை வரவழைத்து சிறப்பாகக் கொண்டாடினான். இப்பத்தினியை இவ்வூர் மக்கள் மிகவும் பய பக்தியோடு வழிபட்டு வருகின்றார்கள். இன்று இக்கோவில் மிகவும் மூர்த்திகரமுள்ள ஆலயமாக விளங்குகிறது.

## இசையும் நாடகமும்

அந்நாள் முதல் இந் நகரம் இசைவளமிக்கதாக விளங்கி வருகிறது. இவ்வாறு இசை மணம் கமழுவதற்கு காரணமாக இருந்தவர்கள், சிறுதொகையினராகிலும் காஞ்சியை விட்டு இங்குறைந்த ''காஞ்சிவேளாப்பார்ப்பார் என்பதை மறுக்க முடியாது. காஞ்சியில் வாழ்ந்த இப்பார்ப்பனரே உண்மையான இசை இன்பத்தைச் சுவைத்து மகிழ்ந்தனரென்பதை 'இசை சேர் காஞ்சி" என்று புலவர்கள் பாடுவதிலிருந்து அறியக் கிடக்கிறது. இன்னெலி நிரம்பி நின்ற மாநகரில் குழந்தை முதல் முதியோர் வரை பண்ணொடு பாடுவதிலும் ஆடுவதிலும் காலத்தைச் செலவு செய்து அகமகிழ்ந்தனர். இங்கு வாழ்ந்த மகளிர்'குழலும் வீணையும்யாழும் என்றினையன குழையய் இனிமையாகப் பாடினர். இவர்கள் நெல், சாமி, தினை, வரகு முதலிய தானியங்களைக் குத்தும் அவர் ஒன்றாகச் சேர்ந்து ஒரே வேளையில்.

> ''கல்லால் உரலாம் வள்ளிக்கு; கருங் கொம்பினால் உலக்கைகளாம்
>
> மான் தோல் சுழகாம் வள்ளிக்கு; மா இடித் துத் தெள்ளுவவாம்
>
> துள்ளி துள்ளி மா இடித்து; தெள்ளித் தெள்ளிக் கொட்டுவவாம்
>
> பிள்ளை யாரடி பிள்ளை யார்; யானை முகப் பிள்ளை யார்''

என்று பண்ணுடன் பாடிக் கொண்டு ஓசைக்கிசையஉலக்கை இடிப்பர். அவ்வோசை நயமும் தாளவமைதியும் கேட்போர் செவிக்கின்பம் பயக்கும் அன்றியும் இக்காலத்திற் கண் குழி பாய்ந்துபோகும் வண்ணம் இரவும் பகலும் படித்துப்பட்டங்களைப் பெற்ற பட்டதாரிகளும் வித்துவான்களும் காண முடியாத உண்மைகளை விளையாடிக் கொண்டே பாடுவார்கள். இவ்வூர்ப் பெண்கள் முன்னாளில் வல்லிபுரஆழ்வார் முன்னிலையில் கும்மியடிக்கும்போதும் சானை கொட்டும்போதும்:

"கும்மியடி பெண்கள் கும்மியடி; குனிந்து கும்பிட்டுக் கும்மியடி;
நம்மை எழில்தரன் தாழ்பணிந்து நாளும் கும்மியடி யுங்கோடி
மாங்காய் காய்ச்சுத் தூங்குதடி மகராஜன் பட்டண வீதியிலே;
தேங்காய் உருளக் குடமுருளக், தேங்காய்த் தண்ணி அலேமோத;
தென்னமர வட்டுக்குள்ளே இரண்டு. தேரை இருந்து முளிசுது பார;
பாக்குமர வட்டுக்குள்ளே இரண்டு, பாவை இருந்து முளிசுதுபார்;

என்று பண்ணும் தாளமும் மாறுபடாதபடி வணங்குவர். பெண்கள்போன்றே ஆண்களும் நெற்றி வியர்வை நிலத்தில் விழ பாடுபடும் போது, தங்கள் உடல் வருத்தத்தைப் போக்க வெண்ணிப் பாட்டிசைப்பர். இவ்வேளாளாப் பார்ப்பாரில் மர வேலை செய்யும் இருவர் வாளால் மரத்தை அரியும்போது ஏற்படும் சோம்பலை நீக்க:

ஒருவர்:- மாறு மதுரையினின்று
மற்றவர்:- மதவாச்சி ரேசனிலே
ஒருவர்:- தேனூர் குழலியரைத்;
மற்றவர்:- தேடுகுது தந்தி வந்து;
ஒருவர்:- வாழும் பராயத்திலே,
மற்றவர்:- வந்ததடா தூக்குமரம்;
ஒருவர்:- தூக்குமரம் என்ன செய்யும்.
மற்றவர்:- தூக்குக்கயிறு என்ன செய்யும்.

இவ்வாறே இவ்வூர் மக்கள் ஈழத்தின் நாடகக் கலைக்கும் நல்லொளி கொடுத்து வருகிறார்கள். இக்கலையை இப்பார்ப்பனர் வேறோரிடத்திலும் கற்றுக் கொண்டவரல்லர், தம் அறிவு உணர்விலும் பழக்கங்களிலும் கண்டுணர்ந்து பயின்று வருகின்றனர். ஆதியில் கருத்துக்களாகிய நாட்டியத்தையும் கதைகளாகிய நாடகத்தையும் நடித்து அவற்றைக் கூத்து என்று அழைத்தனர். நாடகத் துறையிலுள்ள அறுபத்துநான்கு கலையிலும் வல்ல இவர்கள் நடிக்கும் கூத்துகள் வீரம், அச்சம், இழிவு, வியப்பு, இன்பம், துன்பம், நகை, நடுவுநிலை, வெகுளி என்ற நவரசங்கள்பெற்று மிளிர்ந்தன. முதலில் கூத்துக்கலைத்

திருவிழாக் காலங்களில் இறைவன் சந்நிதியில் ஆடிவந்தனர். பின்னர் ஊரிலுள்ள தெருச்சந்திகளில் தாம் தொழில் செய்ததினல் ஏற்பட்ட சோம்பலை நீக்க இரவில் இரண்டு மூன்று மணித்தியாலங்கள் கொண்ட கூத்துக்களை ஆடினர். இத்தெருக்கூத்து நன்கு விருத்தியடைந்து தினமும் நிகழ்ந்து வரலாயிற்று. இக்கூத்துக்கள் பின்னர் பெரும் வெளியிலும் உல்லாச மண்டபங்களிலும் இரவு முழுதும் நடிக்கும் விலாசக் கூத்தாக மாறியது. இக் கூத்துகளில் வரும் பாத்திரங்களிடையே நிகழும் பேச்சு வார்த்தைகள் பெரும்பான்மை பாட்டின் மூலமே நடைபெற்றது. பின்னர் இக் கூத்தை பெரும்பான்மை வசனங்களைக்கொண்ட நாடகமாக்கி மேடையேற்றினர் இவ்வூர் மக்களைப்பார்த்து மற்றைய ஊரவர்களும் நாடகங்களை நடித்தனர். அநேகமாக அவ்வூரவர்கள் பெண் பாத்திரங்களுக்கு வேண்டிய தாசிகளை இந்தியாவிலுருந்து வரவழைத்து அவர்களுடன் நடித்தனர் — நடித்தும் வருகின்றனர். ஏராளமான மக்கள் இவர்களைக் கொண்டு நேர்த்திக்காகத் தமது கோவில்களில் நாடகங்களை நடத்துவித்தனர். இலங்கையில் வந்து குடியேறிய சிங்கள ஆரிய மன்னர்கள் நாடகம் காமத்தை விளைவிக்கும் கலை என்று கருதி இக்கலையைத் தலையெடுக்க வொட்டாது அடக்கினர். இதனுல் கோவில்களில் கூத்துக்களும் நாடகங்களும் தடை செய்யப்பட்டன. இந்தியாவிலும் இவ்வூரில் இக்கலை தளராது வளர்ந்து கொண்டே வந்தது. ஈழத்தின் மற்றைய பகுதிகளில் அழிந்து வந்த இக்கலை, ஆங்கிலேயர் இங்கு புகுந்ததால புத்துயிர் பெற்றது. இதனுல் இவ்வூரவர்களால் பாதுகாக்கப் பட்ட நாடகக்கலை இங்கிருந்து ஈழமெங்கும் பரவலாயிற்று. இவர்களால் சுமார் இருநூறு ஆண்டுகளுக்கு முன்னரே கிருஷ்ண தூது, மார்க்கண்டேயர், குசலவன், சிறுத்தொண்டர், அம்பிபவளக்கொடி, கோவலன் அரிச்சந்திரா, நல்ல தங்காள், சாவித்திரி, ஜெயச்சந்திரா, காத்தவராயன், வள்ளிதிருமணம், கண்டிஅரசன்பூதத்தம்பி, இராணசங்காரம் போன்ற நாடகம் நடிக்கப் பட்டது. இன்னும் இக்கலையை வளர்க்கும் முகமாக கலாமன்றம் கலைவாணி மன்றம் கலைமன்றம் போன்ற நாடக மன்றங்களைநிறுவி அதன் மூலம் பழைய புதிய நாடகங்களைப் படைத்தளித்து ஈழத்தின் நாடக வானில் முன்னேடியாகத் திகழ்கிருர்கள்.

**ஊரின் எல்லை**

இராமணன் வேண்டியதால் மருதனை வயலில் தங்கிய ஒரு பகுதி வேளாப்பார்ப்பார். பின்னர் இதன் மருங்கிலுள்ள காடடர்ந்த பகுதியைத் திருத்திஅங்கு தம்மினத்தவர் யாவரையும் குடியிருத்தினர். இவ்வாறு அமைந்த அந்தரம் இப்போது வழங்கி வரும் கற்கோவளம் வல்லிபுரக்குறிச்சி, புற்றளை, பருத்தித்

துறை, தும்பளை, ஆகிய இடங்களை எல்லைகளாகக் கொண்டு விளங்கியது. இதற்குச் சாட்சியாக தற்போது இவ்வூர் இருக்கும் எல்லைக்கும் அந்நாளில் இருந்த எல்லைக்குமிடையேயுள்ள ஏராளமானமானகாணிகள் இவ்வூரில் வாழும் மக்களுக்கு உரிமையாக இருப்பது ஒரு காரணம் அத்தோடு இன்று தும்பளைக்கும். இவ்வூருக்குமிடையில் அமைந்திருக்கும் இடங்கள் கொல்லன் கலட்டி, தச்சன் கலட்டி என்று வழங்கி வருவதால் இவ்விடங்கள் முன்னர் இவ்வூருடன் சேர்ந்த பகுதி என்பதை ஒரு தடையுமின்றி நிரூபிக்கிறது. ஆனால் காலகதியில் வேறு இனத்தவர் இவ்விடங்களில் வந்து வந்து குடியேறியமையால். இன்று இப்பகுதி ஒரு மைல் விஸ்தீரணமுடைய சிற்றூராய்க் குறுகிவிட்டது. நாடு சுருங்கினும், இன்றும் வழங்குன்றுது, முத்தமிழ்த் துறையாலும், நுண்தொழிற் கலையாலும் பல ஆக்கப் பணி புரிந்து ஈழதநிற்குப் புதுமை கொடுத்து வருகிறது, என்பது யாவரும் மறிந்த உண்மையாகும்.

## வாழ்க ஈழம்! வளர்க மாதனை!!

*இவ்வாறு திடீர் திடீரென இயற்றிப் பாடுவர். இயற்கையோடு இசைந்து வாழ்ந்த இவ் வேளாப் பார்ப்பார் தம் வாழ்வின் பல துறைகளிலும் இசையை இணைத்து இன்புற்றனர். நாட்டுப் பாடல்களைப் பாடி ஏற்றம் தந்த இவர்கள் தம் நகரத்தில் இசைச் சங்கங்களை நிறுவி பாடகருக்கும் இசைக் கருவியை இசைக்கும் வித்துவான்களுக்கும் நன்கொடைகள் கொடுத்து ஆதரித்ததோடு, இளைஞர்களுக்கு இசையூட்டியும் வந்தனர். இம் மன்றங்களில் புல்லாங்குழல், யாழ். பேரிகை, சல்லிகை, மத்தளம், படகம், உடுக்கை, இடக்கை, கரடிகை முதலிய கருவிகள் பயிற்றுவிக்கப்பட்டன என அறியக்கிடக்கிறிது. ஐரோப்பியர்களின் வருகையினால் இச் சங்கங்கள் சிதைந்து போயின. மீண்டும் ஈழத்தில் தமிழிசை வளரவேண்டும் என்று விரும்பிய இவ்வூர் மக்கள் இன்று ''மாதனைத் தமிழிசைச் சங்கம்'' ''வில்லிசைக்குழு'' நாடக மன்றங்கள் போன்ற நிறுவனங்களை நிறுவி இசைத்துறைக்குத் தொண்டாற்றி வருகின்றனர்.



# கலைநிறை மாதலை

— இ. தில்லைராஜன்

காஞ்சிபுரத்துக் கலைக் குடிகள் எனவர்ணிக்கப்படும் இவ்வூர்வாசிகள், காஞ்சியிலுள்ளவர்களைப்போலவே கலை, கலாச்சார, தொழில் நுட்பத்துறைகளில் மேம்பட்டு விளங்குகிறார்கள். ஒருவரையொருவர் மிஞ்சக் கூடிய அளவுக்குத் திறன் வாய்ந்த இவ் வூரவர்கள் எத்தொழிலையும் ஏற்றுச் சிறப்பாகச் செய்து முடிக்கக் கூடியவர்கள். எல்லாத் துறைகளிலும் எல்லோருக்கும் அநுபவம் இருப்பதால் இவர்கள் தமக்கு ஆகவேண்டிய கருமங்களுக்குப் பிறரின் துணைநாடிச்செல்வது கிடையாது. சிற்பம், சித்திரம், சாஸ்த்திரம், சங்கீதம், நடனம், நடிப்பு ஆகியனவும் குறிப்பாக பொறியியற்றுறையும் இங்குள்ளவர்களுக்குக்கைவந்தகலைகளாம்.

இயல்பாகவே இரும்பைக் கொண்டு எதையும் ஆக்கக் கூடிய இவர்கள் பொறியியல் பகுதியில் பெருமளவைத் தெரிந்து வைத்திருக்கிறார்கள், விசேடமாக மோட்டார் வாகனங்கள், நீரிறைக்கும் இயந்திரம், அச்சுயந்திரம், நெல்குற்றும் இயந்திரம், சீவல் இயந்திரம் என்பனவற்றுக்கு வேண்டிய உதிரிப் பாகங்கள், கத்திரிக்கோல், பூட்டு, சுருக்குக் கேற்று, கிறல் ஆகியவற்றை நல்ல முறையில் செய்து வருகிறார்கள். அழகிய கலைதிறன் மிக்க வேலைப் பாடுகளால், இவர்கள் செய்யும் பொருட்கள் ஒவ்வொன்றும் மட்டமும் சுத்தமும் பெற்று விளங்கும். வெளியிடங்களிலுள்ள பலரும் இவர்களின் வினைத்திறனைப் பாராட்டுவதோடு மென்மேலும் பலவித உபகரணங்களைச் செய்வித்தும் வருகிறார்கள் இவ்வூரவரின் பொறியியல் வளர்ச்சிக்குச் சான்றாக அநேகரை எடுத்துக்காட்ட முடியுமெனினும் சிறப்பாக இருவரை மாத்திரம் விளக்குவோம்.

கண்ணுற்பார்த்ததை கையால் செய்வதிற் கெட்டிக்காரர் இவ்வூர் முருகேசு தாமோதரம் பிள்ளை என்பவர். ஆரம்ப கல்வியை மாத்திரமே கற்ற இவர், இயற்கையாகவே தமக்கு வாய்த்த தொழில் நுட்ப அறிவைக் கொண்டு இயந்திரங்க

ளோடு சம்பந்தப்பட்ட பொருட்களை செய்திருக்கிறார். சிறிவயதிலிருந்தே இயந்திரங்களோடு பழகிவந்த இவர் அந்நாளிலேயே மணிக்கூடு, நீரிறைக்கும் இயந்திரம் என்பவற்றை திருத்திக் கொடுத்தார் சிறிது சிறிதாக அறிவைப் பெருக்கிக் கொண்ட இவர் முதன் முறையாக பாக்குச் சீவும் இயந்திரம் ஒன்றைச் செய்தார். அது எந்த வித கோளாறும் இன்றி மணிக்குப் பல ஆயிரம் பாக்குகளைச் சீவி அவருக்குப் பெருமையைக் கொடுத்தது. முதன் முயற்சியிலேயே வெற்றியைக் கண்ட மகிழ்ச்சியினுல்தொடர்ந்தும் உற்சாகத்தோடு சடிகாரம், அச்சியந்திரம் ஆகியவற்றின் இணைப்புப் பாகங்களையும், ரேடியோ பட்டரியையும் தயாரித்தார்: அவை மிகச் சிறந்த முறையில் பொருந்தித் திறம்பட இயங்கின. இவ்வாருக இவர் ஆக்கியனவெல்லாம் அவரது அறிவை வளரத்தச் செல்ல அதிலிருந்தும் பலபுதிய பொருள்கள் பிறந்தன. 'எஸ்லோன் பைப்பில் புல்லாங்குழல்'— 'நடை வண்டில், எண்பூட்டு மின்சார மீற்றர் டைனமோ மாமறுக்கும் சக்கர வாள், சைக்கிள் பூட்டு க'ஸ்கற் தாஞகவியங்கி இடியப்பம் பிழியும் இயந்திரம் இட்லிக்கு உழுந்து அரைக்கும் இயந்திரம் எண் வகை அலகுபூட்டக்கூடிய துளைக்கும் கருவி என்பவை இவரால் உருவாக்கப்பட்டனவற்றுள் சில வாகும். அண்மையில் இவரது அயராவிழைப்பால் கண்டோர் வியக்கும் வண்ணம் ரூபா ஒன்றரை லட்சம் பெறுமதியான கடைச்சல் இயந்திரம் (Lathe) சுமார் 80 ஆயிரம் ரூபாவுக்குள் செய்து முடித்தார். அவ்வியந்திரத்தைப் பார்வையிட்ட எந்திரவியலாளர் அவரின் சாதனையை வெகுவாகப் பாராட்டியுள்ளனர். புகழ் பெற்ற கம்பெனிகள் பல இவரது மதி நுட்பத்தை மெச்சி வாழ்த்துக்களைத் தெரிவித்தன. இன்னும் எத்தனையோ தொழிலதிபர்கள் இவரை நாடி வந்து நல்லாசிகள் கூறி தத்தமக்கு ஒரு கடைச்சல் இயந்திரம் செய்து தரும்படி கேட்டுள்ளனர். இவரின் நன் முயற்சிக்கு ஊக்கமளித்தவர்களும் திரள் திரளாக வந்து இயந்திரத்தைப் பார்த்தவர்களும் 'மாதனையில் இப்படி ஒரு திறமைசாலியா!' என ஆச்சரியப்பட்டனர்,

அவ்வியந்திரம் இன்று யாழ்ப்பாணத்தில் இலங்கைகைத் தொழில் என்ஜினியரிங் கூட்டுத்தாபனத்தில் எல்லோரும் காணும்படியாக வைக்கப்பட்டுச் செயல் புரிந்து வருகின்றது. இலங்கையில் முதன்முதலாக — அதுவும் ஒருசாதாரண கிராமவாசியினுல் உருவாக்கப் பட்ட கடைச்சல் இயந்திரம் (Lathe) இதுவேயாகும், அதுமட்டுமல்ல சங்கானையில் தொழிற்படும் கண்ணாடித் தொழிற் சாலைக்கு வேண்டிய இயந்திரங்களைச் செய்தவரும் இவரே! படித்துப் பட்டம்பெற்ற என்ஜினியர்களெல்லாம் நினைத்துக்கூடப் பார்

க்கமுடியாத இந்த அரிய பெரிய சாதனையை மிகச் சுலபமாகச் சாதித்த திரு. தாமோதரம்பிள்ளையின் மதிநுட்பத்தை என்னவென்று உரைப்பது!?

திரு. தாமோதரம்பிள்ளையை ஒத்த— சமமான அறிவு படைத்த மற்றொருவர் சி.கணேசரத்தினம் என்பவர். எதையும் எளிதிற் புரிந்து கொள்ளக்கூடிய இவர், நுணுக்கமான வேலைகளைச் செய்வதில் சமர்த்தர். எப்பொருளையும் துருவியாராயும் மனப்பாங்கு உள்ள இவரால் எக் கடின காரியத்தையும் இலகுவாகச் செய்ய முடியும். வரைபடமுறைகளையும், கோண அளவீடுகளையும் நன்கறிந்த இவர் கட்டிடங்களுக்குரிய பொருத்துக்கள், பூட்டுக்கள், வளைவுகள் சம்பந்தப்பட்ட வேலைகளோடு கார்ப்பூட்டு, கேற்பூட்டு, பணப்பெட்டி அலுமாரி ஆகியவற்றுக்குப் பொருத்தப்படும் நவீன சிறு பூட்டுக்கள், துளைக கருவிகள், சிறு சக்கரங்கள் என்பனவற்றைச் செய்து தருகிறார். மாவிட்டபுரம்வாளிக்கம்பெனிக்குரிய இயந்திரங்களில் முக்கிய பாகங்களில் சிலவற்றை இவரே செய்து கொடுத்திருக்கிறார். இவர்களைப் போலவே இன்னும் பலர் தத்தமக்கு எட்டியவரையில் ஏதேனுமொன்றைச் செய்து கொண்டிருக்கிறார்கள். இவர்களெல்லோரும் தமக்கு வாய்த்த பொறியியல் அறிவைக் கொண்டு, அத் துறையின் வளர்ச்சிக்கு அயராது உழைத்து வருவது கண்கூடு.

## சிற்ப சித்திரக் கலைகள்.

சிலை வடிக்கவும், சித்திரம் தீட்டவும் தெரிந்தவர்கள் இங்கு இருக்கிறார்கள். பழங்காலந் தொட்டே மரத்தினால் பல உருவங்களைச் சமைத்து வரும் இவ்வூரவர்கள் அத்தொழிலில் முன்னையவர்களைக் காட்டிலும் முன்னேற்றமும் வளர்ச்சியும் அடைந்திருக்கிறார்கள். இன்று மரத்தினால் மட்டுமல்ல சீமெந்து, கருங்கல், வெண்கலம் முதலிய வைகளைக் கொண்டு பலவித உருவங்களைச் செய்யவும் பழகியிருக்கிறார்கள். எல்லோருக்கும் பொதுவாக இக்கலை தெரிந்திருந்தாலும் மற்றவர்களைக் காட்டிலும் சிறப்பாக மரத்தினால் வாகனம் அமைப்பதில் கைதேர்ந்தவர் திரு. வல்லியப்பர் மூத்ததம்பி என்பவர். ஈழத்தின் பல பாகங்களிலும் உள்ள தமிழ்க் கோவில்களில் இவர் செய்த வாகனங்கள் இருப்பதைக் காணலாம். இவர் கைவண்ணத்தில் பிறக்கும் வாகனங்கள் எவையும் மற்றவர்கள் செய்ததைக் காட்டிலும் அழகும் அமைப்பும் பொருந்தியதாக இருக்கும். எந்த உருவைக் கருத்திற்கொண்டு அமைக்கிறாரோ அவ்வுருவின் ஜீவகளை கொண்டதாக விளங்கி நிற்கும். இவரைப் போலவே இவருடைய உறவினர்களும் இத்



M. SATKUNAM, M. A.

தொழிலையே மேற்கொண்டுள்ளனர், ஒன்றைப் பார்த்தமாத்திரத்தில் புரிந்துகொண்டு அவற்றை உள்ளபடியே உருவாக்கும் செயல்திறனும், கற்பனைசக்தியும் மிகுந்த கா. இ. சபாரெத்தினம் ச. நடராசா ஆகிய இருவரும் இசைக் கருவிகள் இயற்றுவதில் வல்லவர்கள். இவர்கள் மிருதங்கம், கெஞ்சிரா, புல்லாங்குழல், தபேலா, உடுக்கை முதலிய வாத்தியங்களை அமைத்து வருகிறார்கள். யானைத் தந்தம், மான் கொம்பு, கருங்காலி ஆகிய மூன்றையும் சேரத்துச் செய்யப்பட்டு வழக்கறிஞர் ஜி.ஜி. பொன்னம்பலத்தின் உறவினர் வீட்டில் வைக்கப் பட்டிருககும் பூவேலைப்பாடமைந்த இரண்டடி உயரமுள்ள அழகுச் சின்னமொன்று இவர்களுடைய திறனுக்குச் சான்று பகர்கின்றது.

திரு. பொ. சிவப்பிரகாசம் தச்சுத்தொழிலைப் பூரணமாக உணர்ந்தவர்; அதனில் ஆழ்ந்த அனுபவம் கொண்டவர். இவர் மெல்லிய பொருட்களைப்பயன் படுத்தி மெதுமை வாய்ந்த — நுட்பம் செறிந்த — அழகிய வேலைப்பாடுகள் புரிவதில் புகழ்பெற்றவர். சிறிய சிற்பங்கள் செதுக்குவது இவருக்கு பிடித்தமான ஒன்று. ஓய்வு நேரங்களில் மரத்தினால் கைத்தடி, ஆடும்பாயில், பாயும் குதிரை, அன்னம், கிளி, மான் இவைகளைச் செய்து வருகிறார். இவர் 19[illegible]8-ம் ஆண்டு இலங்கைக்கு வந்த இங்கிலாந்து இராணுவ அதிகாரி ஒருவருக்குப் பனந்துண்டுகளையும், பன்றி முட்களையும் பயன்படுத்திச் செய்யப்பட்ட பேழை ஒன்றை அன்பளிப்புச் செய்தார். அப்பேழையின் அமைப்பை நன்கறிந்த அதிகாரி இவரைக் கைகுலுக்கி வரவேற்றுப் பாராட்டுச் செய்தார். இவருடைய கலைத்திறன் கண்ட இலங்கை கலாச்சாரப் பகுதியினர் யாழ். வேம்படி மகளிர் கல்லூரிக்காக அழகொழிரும் ஐந்நூறு கோலாட்டக் கம்புகள் செய்வித்துள்ளனர். அன்றியும் 1966ம் ஆண்டு யாழ் மாவட்டக் கலைக்கண்காட்சியில் கலந்துகொண்ட இவரின் சித்திரக் குதிரைக்கு முதற் பரிசும், இவருக்கு பாராட்டுப் பத்திரமும் வழங்கப்பட்டுள்ளன.

அடுத்துச் சிலை செய்வதிற் பெயர்பெற்றவர்கள் வே. கிருஷ்ணசாமி, இ. இராஜகோபாலன் என்பவர்கள். இவர்கள் சீமெந்தைப் பயன்படுத்தி தெய்வச்சிலைகள், அழகுப் பொம்மைகள், அலங்கார வடிவங்கள் ஆகியவற்றைச் செய்கிறார்கள். அத்தோடு திரையோவியம், எழுத்தோவியம் தீட்டுதல், வர்ணக் கடதாசிகளைக் கொண்டு பூக்கள் மாலைகள், சரங்கள், சோடினைப் பொருள்கள் என்பவற்றையும் செய்து வருகிறார்கள். இவர்கள் மட்டுமல்ல இன்னும் எத்தனையே பேர் அத்தொழில்முறைகளில் தேர்ச்சிபெற்றிருப்பதோடு அவற்றைச் செய்வதிலும் ஈடுபட்டிருக்கிறார்கள்.

மரத்தில் கண்ணாடியைப் பதித்து உருவாக்கிய 'சப்பரம்' 'சிகரம்' இரண்டையும் இவ்வகையருக்கு அறிமுகப்படுத்தியவர்கள் இவர்களுடைய மூதாதையினரே! இவர்களுக்கு இணையாக சிற்ப - சித்திர வேலைகளைக் கன கச்சிதமாகச் செய்யத் தகுந்த மற்றொருவர் திரு. வ. கிருஷ்ணமூர்த்தி அவர்களாவர்.

## இயல் - இசை - நாடகத்துறைகள்.

இயல் - இசை - நாடகம் என்னும் மூன்றையும் பேணிப் பாதுகாத்து, அதன் வளர்ச்சிக்கும் - உயர்வுக்கு மாகப் பாடுபட்டு வருபவர்களில் மாதனை வாழ் மக்களுக்குப் பெரும் பங்கு உண்டு. இசையில் பெரிதும் ஈடுபாடுடைய இவர்கள் இசையோடு தொடர்புடைய துறைகளைப் பயின்று வருகிறார்கள். இவர்களைத் தவிர கேள்வியறிவால் இசைப்புலமை பெற்றுப் பாடுபவர்களும் உள்ளனர். அவர்களுள் சுருதி நிச - பேதத்தைத் தெரிந்துகொண்டு தாள அமைதியுடன் இராக ஆலாபனை செய்து, கேட்போர் மெய்ம் மறந்து இரசிக்கும் வண்ணப் பாடிவரும் இருவர் காளிமுத்தன் மகாலிங்கமும், கவிராஜநரையுமாகும். பாகவதர்கள் போலப் பாடும் இவர்கள் வாய் திறந்தால் போதும் பக்திப் பாடல்களும், பண்ணிசையும் வெள்ள மெனப் பாயும் வாய்ப்பாட்டில் தேர்ச்சி பெற விரும்பிய க. துரைராசா என்பவர் இந்தியாவுக்குச் சென்று கற்று, 'இசை மணிப்' பட்டம் பெற்றார்; இவர் இனியபாடல்களைப் பாடுவதன் மூலம் சங்கீதவுலகில் மங்காப் புகழ் பெற்றிருக்கிறார். மேலும் இங்கு ஓர் தமிழிசைச் சங்கத்தை நிறுவி, அதன்மூலம் இவ்வூர் மக்களுக்கும், பிறருக்கும் வாய்ப்பாட்டு, வயலின், மிருதங்கம் ஆகிய இசையின் இன்னோரன்ன பகுதிகளிலும் வகுப்புக்கள் நடாத்தி வருகின்றார். இவருடைய பெரும் பணிக்கு உறுதுணையாக நின்று தம் மாலியன்ற உதவிகளைச் செய்து, சங்கவளர்ச்சிக்கு வேண்டிய ஆக்கமும் ஊக்கமும் அளித்து வருகிறார் - மு. சாம்பசிவம் என்னும் இன்னொரு இசை யாசிரியர். இவரும் பாடுவதில் மற்றவர்களுக்குச் சளைத்தவர் அல்லர். 'தமிழிசைச் சங்கம்' ஆண்டு தோறும் 'இசைவிழா' எடுத்துப் புதிய பாடகர்களையும், பக்க வாத்திய வித்துவான்களையும் வெளியுலகுக்கு அறிமுகப்படுத்து வதோடு, தலை சிறந்த கலைஞர்களைக் கௌரவித்தும் பட்டங்கள் வழங்கியும் வருகின்றனர்.

இசையால் கட்டுண்ட இவ்வூர் இளைஞர் ஒருவர் 'சின்ன மணி' எனச் செல்லமாக அழைக்கப்படுகிறார். இவருடைய இயற்பெயர் ஐ. நா. கணபதிப்பிள்ளை என்பதே. இவர் இன்று ஒரு சிறந்த வில்லிசைக் கலைஞர். சிறுவயதிலிருந்தே இசை மீது

ஆழ்ந்த பற்றுதலும் – பிடிப்பும் வைத்திருந்த இவர். சிந்து மெட்டுக்களினால் கவரப்பட்டு அதனைக் கற்று நடனங்களுக்கும் நாடகங்களுக்கும் பாடிவந்தார். நாளடைவில் வேறு பல இராகங்களையும் தெரிந்துகொண்டு, திருப்பூங்குடி ஆறுமுகம் அவர்களின் வில்லிசைக் குழுவில் சேர்ந்து அவரது நிகழ்ச்சிகளைச் சிறப்பித்தார். சிலகாலங்களின் பின்பு தானே ஒரு வில்லிசைக் குழுவை அரம்பித்தார். மிகக் குறுகிய காலத்தில் சுவையான கதைகளையும், இனிய பாடல்களையும் மகிழ்வூட்டும் காஷ்ய வெடிகளையும், நளினம் கலந்த பேச்சையும் ஒன்று கூட்டி இஞ்சுவை நிகழ்ச்சிகள் பலவற்றைத் தயாருத்தளித்து இரசிகப் பெருமக்களின் அமோக பாராட்டுதல்களைப் பெற்றதோடு. அவ் வமயம் ஈழத்திலிருந்த பிற வில்லிசைக் கலைஞர்களின் புகழையும் மங்கச் செயதார். இரசிகர்களிடையே தனக்கிருந்த வரவேற்பைக் கண்டு தன்னடக்கத்துடன் மேன்மேலும் நவரச நிகழ்ச்சிகளைத் தொகுத்தளித்து மக்களைத் திருப்திப்படுத்தினர். இவருடைய கலைஞானத்தை உள்ளபடியுணர்ந்த கலைஞர் பெருமக்கள் அவருக்குப் பல்வேறு சிறப்புப்பெயர்களை நல்கினர். யாழ் நகர் இரசிகர்கள் 'கலாவிநோதன்' என்ற பட்டத்தைச் சூட்ட பருத்தித்துறையில் மேலைப் புலோலி: கதிரைவேற் பிள்ளை கலாமன்றத்தினர் 'வில்லிசை வேந்தன்' என்ற புகழ் நாமஞ் சூட்டி விருதளித்துக் கௌரவித்தனர். இலங்கையின் பல பாகங்களிலும் வில்லிசையால் நல்லிசை பரபபிவரும் கலாவிநோதன் க. நா. கணபதிப் பிள்ளையால் காதலியூரின் இசைவளத்தை மற்றவர்கள் நன்கு புரிந்து கொள்ள முடிகிறது.

பரதக் கலையைப் படித்து அதனைப் பயிலுவோருக்கெல்லாம் பக்குவமாய் கற்பிக்கும் கலைஞர்களும் இங்கு இருக்கிறார்கள். அவர்களுள் முதன்மை பெற்றுப் புகழுடன் விளங்குபவர் கலைமாமணி நா. நவரத்தினம் அவர்கள். இவரிடம் நடனம் பயின்றவர்களால் பெஹ்ருட் புகழ் திரைப் படநடிகை சந்திரகலாவும், வெள்சங்கு ராஜமும் கடமையின் எல்லை ரதிதேவியும் குறிப்பிடத் தக்கவர்கள். கொழும்பிலும் யாழ் நகரிலும். மட்டக்களப்பிலும். இலங்கை வானொலியிலும் அநேக நடன நிகழ்ச்சிகளைத் தயாரித்தளித்தஇவர், பிரபல்யம் வாய்ந்த நாட்டிய நாடகங்களையும் மேடையேற்றியிருக்கிறார்கள். கண்ணகி, கர்ணன், சகுந்தலை பரதன், இராமவதாரம், கிருஷ்ணலீலை என்பன இவருக்குப் புகழையும், பெருமையையும் ஈட்டிக் கொடுத்த சிறப்புறு நாட்டிய நாடகங்களாகும். கீதாஞ்சலி நல்லையாவின் உறவினரானஇவர் கலாவிநோதன் கணபதிப்பிள்ளை உடன் பிறந்த சகோதரருமாவார். இவரை பின்பற்றி இக் கலையை இன்றுள்ள இளைஞர்கள்

M. SATKUNAM. B. A. (HONS)

யுவதிகள் பலரும் கற்றுவருகின்றனர். "இவ்வூரில் நடனக் கலை பரவுதற்கும் அதனை மேற்கொண்டு வளர்ப்பதற்கும் வித்திட்டவர் இவரேயாகும்.

சுமார் நூறு வருடங்களுக்கு முன்பே இங்கு நாடகக் கலை பரவியிருந்தது. அந்நாளில் உள்ளவர்கள் நடிப்புக் கலையைப் பயின்று சரித்திர புராணக்கதைகளையும், தாமே எழுதிய கற்பனைக் கதைகளையும் நாட்டுக் கூத்தாகவும், மேடைக்கூத்தாகவும் நடித்து வந்தனர். நாடகங்களில் ஊரவர் அனைவரும் ஒவ்வொரு பாத்திரமேற்பது அந்நாளைய வழக்கம். இச்செய்கையால் நடிக்கக் கூடியவர்களுக்கு முன்னேற்றமும், நடிக்க விரும்பியவர்களுக்கு ஆசையும், ஆர்வமும் ஏற்பட்டது. நடிக்க முடியாதவர்கள் நாடகத்தின் பல்வேறு அம்சங்களில் உதவினர், இவ்வாறு அந்நாளிலிருந்து இந்நாள்வரை படிப்படியாக வளர்க்கப்பட்டு வந்த நாடகக் கலை இன்று அதியுன்னத நிலையை அடைந்திருக்கிறது.

இன்று கருத்தையள்ளும் கனிமொழிகள் பலபேசி, அனல் தெறிக்க அடுக்குமொழி பலபேசி உள்ளத்தைத் தொட வைக்கும் உருக்கமான வசனம்பேசி, வயிறு குலுங்கச் சிரிக்கவைக்கும் காஷிய வசனம் பேசி; காதல், வீரம், சோகம் நகைச்சுவை ஆகிய பாத்திரங்களை ஏற்றுமக்கள் மனதைக் கவரும் வகையில் உணர்ச்சி ததும்ப நடிக்கக்கூடிய நடிகர்களும், இன்னும் கதாசிரியர்களும் பாடலாசிரியர்களும் தயாரிப்பாளர்களும் ஒப்பனையாளர்களும் இங்கு இருக்கிறார்கள். இத்தன்மைகள் எல்லாம் ஒருங்கே அமையப் பெற்ற விற்பன்னர்களாக கலைஞானி மகாலிங்கம், கலா விநோதன் கணபதிப்பிள்ளை, க. கணபதிப்பிள்ளை, வ. கிருஷ்ண பிள்ளை எஸ். கே. பிள்ளை, கலைமாமணி நவரத்தினம், பொன் சிவப்பிரகாசம், ந. சிவசுப்பிரமணியன், இ.பாலசுப்பிரமணியன் கு. தியாகராசா, ச நடராசா ச. தியாகராசா எஸ்.இராஜதுரை இ இராஜகோபால் செ. வேணுகோபால், இ. குலசேகரம், எஸ். சண்முகநாதன், த. சச்சிதானந்தம் என்போர் திகழ்கின்றனர். இவர்கள் அனைவரும் நாடகக் கலையை நாடெங்கும் பரப்ப வெண்ணிமாதனை கலா மன்றம் கலைவாணி மன்றம் என்னும் இரு மன்றங்களைத் தாபித்துக் கலைத் தாய்க்குச் சேவை செய்து வருகிறார்கள்.

இற்றைக்கு இருநூறு ஆண்டுகளுக்கு முன்பிருந்த மூதாதையர்களும், அவர்கள் வழிவழியே வந்தவர்களும், அவர்களைத்தொட்டு இன்றுள்ளவர்களும் தமிழர்களின் பாரம்பரியமான கலை கலாச்சாரத்தையும், தொழில் வகைகளையும் எந்தெந்த வழிகளில் வளர்க்க முடியுமோ அந்தந்த வழிகளில் வளர்த்து வருகின்றார்கள். இவ் வூரவர்களின் கலையார்வமும், கைத் தொழில் வளர்ச்சியும் ஒருங்கு சேர 'மாதனையூர்' கலை வளர்க்கும் திருநகராக விளங்கி நிற்கிறது.

★ ★

# திருக்கோவிலில் செந்தமிழ் முழங்கட்டும்!

வழக்கறிஞர் த. தில்லைநடேசன்

இன்பத் தமிழால் இறைவனைப்பாடி, அன்பைப் பெருக்க வழியறியாது வருந்துவதை எண்ணும் போது எமக்கு வேதனை பிறக்கிறது. தேனூறும் மூவர் தேவாரம், தித்திக்கும் திருவாசகம், அருள் சிந்தும் திருமூலர் திருமந்திரம், ஆழ்வார்களின் அருள் வாக்குகள், மற்றும் இன்னோரன்ன அன்பிற் குழைத்த அருந்தமிழ்ப் பாக்கள் பல இருக்க, இவை அனைத்தையும் விடுத்து, வண்டமிழுக்கு ஒவ்வாத வடமொழியிலா கடவுளை வழிபடல் வேண்டும்? 'அப்பன் நீ, அம்மை நீ ஐயனும் நீ, அன்புடைய மாமனும் மாமியும் நீ என்று அன்பு ததும்ப தமிழ்க்குரல் எழுப்பி ஓலமிடுகிறார். இந்த அருட்பெரும் அடியார்களின் வழிவந்த நாம் மட்டும் ஏன் நெஞ்சைப் பிணிக்காத ஊனினை உருக்கி உள்ளொளி பெருக்க உதவாத வடமொழியில் வழிபாடு செய்தல் வேண்டும்? எங்கும் நிறைந்து, எல்லாம் அறிந்து எல்லோருக்கும் இன்னருள் புரியும் இறைவனுக்குத் தேன் தமிழின் இனிமை புரியாதா? அன்றேல் இதயம் கனிந்து இன்னருள் செய்ய மாட்டாரா? செந்தமிழ் செல்வர்களே! இவற்றை நன்கு சிந்தியுங்கள்.

தமிழுலகில் கோவில்கள் அனைத்தும், தமிழரின் உள்ளத்தில் ஊறிய உணர்ச்சிகளை, வெளிப்படுத்துவதற்காகவே அமைக்கப்பட்டது. அன்றெல்லாம் இக்கோவில்களில் முத்தமிழ்முழங்க முதல்வனை புடிதாத்தி வணங்கினர். நம்முன்னோர் 'இன்னோர் இன்பத் தமிழின் இடத்தை வடமொழி வலிந்து பெற்று விட்டது நாம் கட்டிய கோவில்கள் நமக்கே உரியனவல்ல என்ற நிலையினை வருவித்துவிட்டோம். ஆம் அரசியலில், தமிழ் அப்புறப்படுத்திவிட்டதை அறிந்து சீறியெழும் செந்தமிழ் இனம்? ஏன்? இன்னும் தமக்காகத் தம்மால் கட்டப்பட்ட கோவில்களில் தம்மொழி ஒதுக்கப்படுவதை உணர்ந்தும், உரிமைக் குரல் எழுப்பத் தயங்குகிறது.

அகத்தியர் தந்த அருந்தமிழ் நாவலர் வளர்த்த நற்றமிழ்— என்றுமுள்ள செந்தமிழ்—'தெய்வீகத் தீந்தமிழ் என்றெல்லாம் பெருமை பேசுகிறோம். ஆனால் அதே தெய்வீகத் தமிழ் தெய்வ வழிபாட்டிற்கு உகந்ததல்ல என்று புறக்கணிக்கப்படுவது ஏன்? வடமொழியார் வஞ்சனையால் வண்டமிழ் மொழிக்குரிய வளத்தைக் குறைக்க அவற்

றைப் பாத்துக் கொண்டு நாம் இன்னும் சோம்பிக் கிடப்பதா இது எமக்கு அறிவுடைமை யாகுமா? சிந்தனைச் செறிவுள்ள தமிழினமே! தெளிவடையுங்கள்:

அறிவுத்துறையில் ஆக்கம் புரிந்த அமரர் அண்ணாவும் அன்னாரின் குழுவினர் மட்டுமன்றி, சமயத்துறையில் மறுமலர்ச்சியை ஏற்படுத்திய மறைமலையடிகள் தொட்டு இன்று வாழும் குன்றக்குடி அடிகள் ஈறுக இன்பத்தமிழுக்கு இறைவனின் இல்லங்களில் தக்கதோர் இடம் அளியுங்கள் அப்பொழுதுதான் தமிழுலகில் இறை வழிபாடு பெருகும் — ஆதிக்கம் வளரும்—நாத்திகம் அழியும் நல்வாழ்வு நற்றமிழுக்குக் கிட்டும் என நவில்கின்றார்கள்.

'செந்தில் வாழ் செந்தமிழ்ப் பெருமானே!' என்றும் 'தென்னாடுடைய சிவனே போற்றி, எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி' என்றும் அடியார் எழுப்பும் தமிழ் ஆர்வக்குரலை, நாம் எங்கள் திருக்கோவில்களில் எழுப்பி எத்திசையும் செந்தமிழ் மணம் கமழச் செய்வதே, நாம் தமிழுக்குச் செய்யும் சிறந்த கைம் மாறாகும்.

## கோயில் நிலை

ஆதியிலே வழிபாட்டுச் சார்ந்த
பெருங் கோவில் பல
சாதிமதச் சாக்கடை யாய்ச்
சண்டாளர் இரும்பிடமாய்
நீதி அறம் அழித்து வரல்
நின் மலனே! நீ அறிவாய்.
கோதுகளை அறுத்தொழித்துக்
குணம்பெருகச் செய்வாயோ?

திரு. வி.க.

---

'ஆசை அறுமின்கள் ஆசை அறுமின்கள்
ஈசனோ டாயினும் ஆசை அறுமின்கள்
ஆசை படப்பட ஆய்வருந் துன்பங்கள்
ஆசை விட விட ஆனந்தமாமே'

— திருமூலர்

'தீயாரைத் தகர்த்து நல்லாரைப் பேணுதற்கென்று புரியும் வெம்போர் புண்ணியச் செயலாகும், தனது தனி நலத்தை நாடிச் செய்யும் தேவாராதனை பாவச் செயலாகும்'

—சுவாமி சித்பவானந்தர்

# சிந்தித்துச் செயலாற்று !

— பொன். இராஜசேகரம்

எது சரி. எது பிழையெனப் பகுத்தறியும் ஆராய்ச்சி அறிவற்ற சனங்கள் எடுத்ததற்கெல்லாம் தெய்வத்தின் மீது குறை கூறுவார்கள் பழிபோடுவார்கள். அல்லாமலும் தமக்கு ஏற்படும் இன்னல்களுக்கு இறைவனுக்கு நேர்த்தி செய்யாமல் விட்ட குறையே என ஏங்கும் அவர்களது அறியாமை இரங்கத்தக்கதாகும்.

தாங்கள் ஒருவேளை பொங்கலோ பூசையோ செய்யாவிடில் கடவுள் தம்மைத் தண்டிப்பார் என்று பெரிதும் நம்புகின்றார்கள். காலங்காலமாகச் செய்து வந்த மடையையோ கூத்தையோ இடையில் நிறுத்திவிட்டால், வசதியின்மை காரணமாக முற்றாக நீக்கிவிட்டால் அதை ஆண்டவன் பொறுக்க மாட்டார் என்று, அற்காகக் கடன்பட்டாவது கடவுளுக்குத் தாம் வருடாவருடம் செய்ய வேண்டியதைச் செய்கின்றனர். கடன்பட்டு மடைபோட கூத்து ஆட, மோதகம் கட்டுவிக்க வேண்டுமா? உங்களை அப்படிச் செய்யவேண்டுமென்று ஆண்டவன் கட்டாயப் படுத்தி ஞரா? மற்றவர்களிடமிருந்து எதையும் எதிர்பாராமலிருக்கும் அந்த அரும்பெருஞ் சோதிக்கு நாம் நேர்த்தி செய்யவில்லையே என்று ஒரு போதும் கோபம் வராது. ஏனய்யா அவர் கோபிக்கிறார்! எம்மிடம் உணவு வாங்கியுண்ண நம்மைப்போல இரத்தமும், சதையும் கொண்ட சாதாரண மனிதரா அவர்? நமது உணவை நம்பியிருக்கும் அளவுக்கு அவரென்ன ஏழையா? குணம் குறி, விருப்பு வெறுப்பு அற்ற அந்த விமலனுக்கு எதற்கையா உங்களுடைய பச்சரிசிச் சாதம்?

நாம் கொடுக்க வேண்டும் எப்பாடுபட்டாவது எதையாவது கடவுளுக்குச் செய்ய வேண்டும் என்று நினைப்பது - நம்புவது எல்லாம் சுத்த மடமைத்தனம் விரதத்துக்கு வாங்கிய வாழைப் பழத்தைத் தவழும் குழந்தை பிடுங்கி விட்டால், உடனே ஏசுகிறார்கள்! அன்றியும் அப்பழச் சீப்பை பூசைக்கு ஆகாதென ஒதுக்கிவிடுகிறார்கள்! இது எவ்வளவு தவறான செய்கை தெரியாத் தனமாக — அதுவும் கள்ளங்கபடமற்ற சிறு பிள்ளை செய்த பிழையை கருணாநிதியாகிய எம்பெருமான் பொறுத்துக் கொள்ள மாட்டாரா? என்னே இவர்களுடைய அறியாமை!

பசியென்று வந்தவர்க்குப் பத்துப்பைசா கொடுக்க மாட்டார்கள், கோயிலுக் கென்றால் பன்னீராயிரம் ரூபாய் கொடுத்து

விடுவர். உடன் பிறந்தவன், சுற்றத்தவன்கால் வயிற்றுக் கஞ்சிக்கும் வழியில்லாது வருந்த தன்னந்தனியனாய்க் கோயில் கட்டுவாரும் உளர்.

பசித்தவனுக்கு ஒரு பிடி சோறு ஈயாப் பதர்களும், கடுந் துயரால் கண்ணீர் விடும் தம்மினத்தை ஏனென்று எட்டிப் பார்க்காதவர்களும், விழுந்தவர்களைத் தூக்கிவிடா வீணர்களும், கபடம் செய்யும் கயவர்களும், ஏமாற்றிப் பிழைக்கும் எத்தர்களும், உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசும் உலுத்தர்களும், பொய்யும் புரட்டும் புனைந்துரைக்கும் வம்பர்களும் பெரும் பணத்தைக் கொட்டித் தான தருமங்கள் செய்வதில் என்ன பிரயோசனம்

அதை ஆண்டவன் ஏற்றுக் கொள்வாரா? அவ்வாறு செய்பவர்க்குக் கிடைப்பதும் பாவமே! அன்பு ஒன்றினால் செய்யப்படும் கருமம் எதுவுமே இறைவனுக்குப் பிடிக்கும்! அதை விடுத்து அன்பை மறந்து, அறிவை எடுத்தெறிந்து வெறும் வெளிவேசத்துக்கும், பிறர் தம்மைப் புகழட்டும் என்பதற்காகவும் செய்யப்படும் கருமங்களெல்லாம் பயனற்றவை. எல்லா உயிர்களிடத்தும் அன்பு காட்டுவதே போதும். அதுவேஇறைவனுக்கு நாம் செய்யும் பெருந் தொண்டாகும்.

தீண்டப்படாதவர்கள் என்று ஒதுக்கப்பட்டவர்கள் ஆலயத்துள் பிரவேசிக்கப் படாதாமே ஏன்? அப்படிப் பட்டவர்கள் யாராலது இருக்கிறார்களா? மனிதருக்குள் உயர்ந்தவன் தாழ்ந்தவன் என்று என்னய்யா வித்தியாசம்! இறைவன் எல்லோரையும் சமமாகவே படைத்தார். அவர் மக்களைப் பிரித்துக காட்டி, இன்னார் கோவிலுககுள் வரலாம். மற்றவர் வரசகூடாது என்று தடுத்து வைககவில்லை. மனிதன் தனக்குத்தானே கொள்கைகளை வகுத்துக்கொண்டு தம்முடைய சுயநலத்துக்காக வேண்டுமென்றே ஒரு பகுதி மககளைத் தீண்டப்படாதவர்களாக வர்ணித்து ஒதுக்கித் தாழ்த்தி வைத்திருக்கிறான். இந்தநீதியற்ற செய்கையை எடுத்துத் தாழ்த்தப்பட்ட மககள் போராடுவதில் நீதி கேட்பதில் என்ன தவறு இருக்கிறது? பிறப்பால், உருவத்தால், சொல்லால் செயலால், ஓடும் இரத்தத்தால் உயர்ந்தோரை ஒத்திருக்கும் இவர்கள் கோயிலுககுள் சென்றால் என்ன? ஆண்டவன் வரவேண்டாமெனத் தடுத்து விடுவாரா? அவர்களுடைய வேண்டுதலை மறுத்து விடுவாரா?

அவரவர் தம்முடைய மனசாந்திக்காக ஆண்டவனுக்குக் கிரிகைகள் செய்யலாம். ஆனல் கட்டாயம் செய்ய வேண்டுமென்ற நியதியும் கிடையாது. விரும்பியவர்கள் ஏதோ தம்மால் இயன்றதைச் செய்யலாம். மா

ருக உண்மையை அறியாது வெறும் கேலிக் கூத்துகளில் மயங்கி தேவைற்ற பூசலாசுகள் படைப்புக்கள் செய்வது இறைவனுக்கே பிடிக்காதது, நாம் கொடுத்தாலென்ன, கொடுக்காவிட்டாலென்ன அவர் எமக்குத் தமது பெருங் கருணையைக் தந்து கொண்டேயிருப்பார். இதையுணர்ந்து மக்கள் பெயர் லாற்றவேண்டும்.

— — —

'சாதியைப் பார்த்து தெரிந்து கொள்ள முடியுமா?பார்த்துத் தெரிந்து கொள்ள முடியாத சாதியை எப்படிக் கேட்டுத் தெரிந்து கொள்ள முடியும்?

—ஸ்ரீ நாராயண குரு

உலகிலே மிகச்சிறந்த சீர்திருத்தக்காரன் யார் தெரியுமா? தன்னைச் சீர்திருத்திக் கொள்பவனே!

— அறிஞர் பேர்னாட்ஷா

ஒவ்வொருவனும்தனுடைய வேலையைச் செய்வதே அறம் -பிளாற்றோ

கபடமற்ற உண்மையுள்ள அன்பு சுவர்க்க வாயிலின் திறவுகோல்

— அரவிந்தர்

'வாடிய மலரை வீசி எறிகின்றோம், உடைந்த கண்ணாடிப் பாத்திரத்தைக் குப்பை மேட்டிலே வீசுகிறோம். ஆனால் அர்த்தமும், அவசியமும் அற்றுப்போன பழங்காலச் சடங்குகளை மட்டும் இன்னும் விட்டுவிட மறுக்கிறோம் — இருக்கலாமா?

அமைவது அமைக்கப்படுவதை விடச் சிறந்தது—பூத்திடும் மலர் போல பலவர்ணக்காகிதம் கொண்டு மலர்ச் செய்திடலாம்—செய்யப்படும் பொருளிடம் மணமிராது' — பேரறிஞர் அண்ணா

படகு நீரில் இருக்காலாம். ஆனால் நீர் படகுக்குள் நுழையலாகாது அங்ஙனம் மனிதன் உலகில் வாழலாம் ஆனல் உலக ஆசை அவன் உள்ளத்தில் புகுந்து விடலாகாது.

—ஸ்ரீராமகிருஷ்ணர்

'பிறந்த பொன்னாட்டை மறந்து பிறநாடுகளுக்குத் தொண்டு செய்யும் பக்தனும், வளர்த்த இன்மொழியை மறந்து பிறமொழிகளுக்குத் தொண்டு செய்யும் அறிஞனுமே தலைசிறந்த முடத்தங்குகள்' — முத்தமிழ்க் காவலர் கி. ஆ. பெ. விசுவநாதம்

# முத்தமிழ் வித்தகரைப் போற்றிடுவீர் !

— இ. சிவராமலிங்கம் —

ஈழத்தில் தூங்கிக் கிடந்த தமிழினம் விழித்தெழுந்து—வீறு பெற்று முத்தமிழ் தென்றலை எத்திசையும் பரவ உதவிய முத்தமிழ் வித்தகர்களை ஏத்துதல் எமது கடனாகும். இயல், இசை நாடகம் என்ற முத்துறைக்கும் பணிபுரிந்த அறிஞர்கள் இத் துறைகளுக்கு ஆற்றிய சேவையை சிறிது நோக்குவோம்.

## இயற்றமிழ்

இன்று ஈழத்தின் இலக்கண இலக்கியக் கேணியாகத் திகழ்பவர் பண்டிதமணி சி. கணபதிப் பிள்ளையாவார். இவர் தம் வாழ்வை நற்றமிழ்ச் சேவைக்கே அர்ப்பணித்தார். ஆங்கிலமோகங்கொண்டு தமிழை மறந்து எம்மினத்தவர் வாழ்ந்த ஆங்கிலேய ஆட்சிக்காலத்தில், அவர் பழந்தமிழின் சிறப்பை பாமரர்கள் அறியும் பொருட்டு கந்த புராணம், கம்ப ராமாயணம் போன்ற நூல்களை மக்களுக்கு பயிற்றினர். அவர் அன்று கந்தபுராணத்தை பல கோணங்களில் ஆராய்ந்ததின் பயனே இன்று கந்த புராணம் தட்சகாண்ட விளக்க வுரையாகப் பரிணமிக்கிறது. மேலும் இவரால் ஆக்சப்பட்ட 'இலக்கியவழி' என்னும் நூல் இலங்கைப் புலவர்களின் வாலாற்றைத் தருகின்ற விலைமதிக்க முடியாத பொக்கிஷமாகும். இவர் நல்லை நகர் நாவலருக்கு அடுத்து வைத்து எண்ணத் தகுந்தவர். இவர் போன்று தமிழின் சிறப்பு வளர்ச்சி என்பவற்றை யாவரும் அறியும்படி பேராசிரியர் வி. செல்வநாயகம் தமிழ் இலக்கிய வரலாறு என்னும் நூலையாக்கி எமக்களித்துள்ளார். மற்றும் கலாநிதிகள் கைலாசபதி, சு. வித்தியானந்தன். மயில்வாகனம் சிவத்தம்பி, சதாசிவம், கமாலுத்தீன், வேலுப்பிள்ளை, எம். எம். உவைஸ் போன்றோரும், பொன் முத்துக்குமாரன், அருள் செல்வநாயகம், கா.பொ. இரத்தினம் க. வீரகத்தி என்போரும் தமிழின் ஆக்கத்துக்கு ஊக்கம் அளித்துவருகின்றனர்.

இந்திய கவிஞர்கள், எழுத்தாளர்கள் போன்று நாவலும், சிறுகதையும் கவிதையும் தத்ரூபமாகப் படைக்கக் கூடிய கனக செந்திநாதன், புதுமை லோலன் டொமினிக் ஜீவா, குணராசா, (செங்கைஆழியன்) இராஜகோபால் (செம்பியன் செல்வன்)

மௌனகுரு, எஸ். பொன்னுத்துரை, சில்லையூர் செல்வராஜன் கணேசலிங்கம், முருகையன் தமிழ்லீத் தமிலன். தங்கரத்தினம, அகஸ்தியர், பாலேஸ்வரி ரஜனி சண்முகநாதன், காரை. சுந்தரம் பிள்ளை, காசிஆனந்தன், கவிஞர் கந்தவனம், சோ, நடராசன். முகம்மது ஐமீல், தனபால சிங்கம், மருதூர்க்கனி, "மலர்விழி" எம். சி யேசுதாசன் ஆகிய தமிழறிஞர்கள் உளர்.

தமது பேச்சாலும் எழுத்தாலும் சைவத்தையும் தமிழையும் ஒருங்கே வளர்த்து வரும் பெருமைக்குரியவர் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள் இவ்வாறு பல்லாற்றானும் இயற்தமிழுக்கு ஏற்றந்தரும் இவர்களுக்குத் தமிழுலகம் தமது பூரண ஒத்துழைப்பை நல்குவது சியம்.

இசை:

இசைத்தமிழுக்கு மட்டுநகர் இசைஞானச்செல்வர் சுவாமி விபுலானந்த அடிகள் ஆற்றிய சேவை குறிப்பிடத் தக்கதாகும் இவர் எழுதிய 'யாழ் நூல்' தமிழிசையின் வளர்ச்சியில் பெரும் பங்கு கொண்டுள்ளது இந்தியாவில் அண்ணாமலைச் செட்டியார் போன்று ஈழத்தில் இசைக்கலைக்குத் தொண்டு புரிந்தவர் சேர் பொன்னம்பலம் இராமநாதனவர். இவரின் அயராதுழைப்பால் இராமநாதன் இசைக்கல்லூரி நிறுவப்பட்டது! இதுவே இன்று ஈழத்தில் ஏராளமான இசைவல்லுனர்களை உருவாக்குகிறது.

இன்று இலங்கையில் இசை பெருகி வருவதற்கு வித்திட்டவர் இசைப் புலவர் சண்முகரத்தினமாவர். இவரின் பாடல்களிலே இசை இலக்கணம் பொருந்தியிருக்கும் இவரது பாட்டினைக் கேட்ட கே. ரி. ரங்காச்சாரி, செம்பை வைத்தியநாத பாகவதர் தண்டபாணி தேசிகர மதுரைமணி போன்ற இந்திய இசை மேதைகள் மெச்சினர்கள், இவரைப்போலவே பரம் தில்லைராஜன், வால் நடராசா. இராஜலிங்கம், இணுவில் நடராசா, கருணாகரன், ராம்குமாரசாமி, கணபதிப்பிள்ளை அளவை நடராஜன் கே துரைராசா, சண்முகராகவன், செல்லத்துரை, மற்றும் சரஸ்வதிபாக்கியராசா. சத்தியபாமா, இராசலிங்கம் பூமணி இராசரட்ணம், நாகம்மா ஜெகதாம்பிகைபரமநாதன், பிறேமாவதி வைரவநாதன் ஆகியோர் இக்கலைக்குத் தொண்டாற்றி வருகிறார்கள் இவர்களது பாடல்கள் கேட்போரை மெய்மறக்கச்செய்யும். வாய்ப்பாட்டுக்குச் சுவையைக்கொடுக்கக்கூடிய வகையில் வயலின் வாசிக்கத் தக்க சோமஸ்கந்த சர்மா, வைத்தீஸ்வரசர்மா, சித்தி விநாயகம் சர்வேஸ்வர சர்மா, சண்முகானந்தம், குமாரசாமி, இரர்தாக் கிருஷ்ணன், வெங்கடேஸ்வரர் ஞானாம்பிகை தெய்வ சிகாணி தனதேவி சுப்பையா போன்ற

வித்தக வித்தகிகள் இருக்கின்றனர். மிருதங்கம் சிறப்பாக வாசிக்கக்கூடிய இராமநாதன், பாக்கியநாதன், அம்பலவாணன், சந்தானகிருஷ்ணன், சின்னராசா, ரவிச்சந்திரன், செல்லத்துரை, பிரணதீரயுதன், சிதம்பரநாதன் ஆகியோரும் இங்கு உள்ளனர். இக்கலைஞர்களின் கூட்டு முயற்சியில் உருவான ரசிக ரஞ்சன சபா, மாதனை தமிழிசைச் சங்கம், யாழ். அண்ணாமலை தமிழிசை மன்றம் என்பன இன்று பல இளங்கலைஞர்களை உருவாக்கி வருகிறது.

இவ்விசையோடு தொடர்புடைய நாதஸ்வர இசையை இன்று ஈழத்தில்பாராட்டத்தக்க வகையில் வளர்த்து வருபவர் அளவையூர் என். கே. பத்மநாதனுவார். இவரை இந்தியக் கலைஞர்கள் தமது இசை விழாக்களுக்கு அழைத்துப் பாராட்டிச் சிறப்புச்செய்கிறார்கள். இவருக்கு ஏழிசை வேந்து கான சுர மன்னன், கானகலாநிதி, என்னும் பட்டங்களோடு அநேக புகழ்விருதுகளையும் ஈழத்து ரசிகப் பெருமக்கள் வழங்கியிருக்கிறார்கள். இவர் சில ராகங்களை ஆலாபனைசெய்து குழுமியிருக்கும் மக்கள் கூட்டத்தை அப்படியே மயக்கி விடுவார். இவர் போன்றே கேட்போரைப்பிணிக்கத்தக்க முறையில் நாதஸ்வரம் வாசிக்கக்கூடிய கானசுர லலித ஞான குபேர பூபதி பி. ஆறுமுகம்பிள்ளை, பாலகிருஷ்ணன் பஞ்சாபிகேசன், சிதம்பரநாதன் கோவிந்தசாமி, சந்தசாமி என்பவர்களும் இருக்கிறார்கள். திரு. ஆறுமுகம்பிள்ளையின் வித்துவத்தை அறிந்த மலேஷியப் பிரதமர் துங்கு அப்துல் ரஹ்மான் தமது நாட்டுக்கு வரவழைத்துக் கௌரவித்துள்ளார். இவர் திருப்பதியில் நடந்த தியாகராஜ உற்சவத்தில் 11 மணித்தியாலம் நாதஸ்வரம் வாசித்த பெருமையுடையவர். 1954 ல் நாதஸ்வரச் சக்கரவர்த்தி ராஜரத்தினத்துடன் சேர்ந்து நாதஸ்வரம் வாசித்தவர்.

இந்தியக்கலைஞர்களே அதிர்ச்சியுற்று, அதிசயிக்கும் வகையில் தமது கைவன்மையால் ஈடுஇணையற்று விளங்குபவர் தவில் மேதை லயஞான குபேர பூபதி தெட்சணாமூர்த்தியாவர். இவர் போன்றே இந்தியக் கலைஞர்களால் பாராட்டப் படுகின்ற தவில் வித்துவான்கள் நாச்சிமார்கோவில் கணேசபிள்ளை கைதடிப்பழனி, சின்னராசா, குமரகுரு. புண்ணிய மூர்த்தி என்போரேயாவர்.

பரதக்கலை பாரத நாடு போல் இங்கும் பரவுவதற்குப் பாடுபட்டவர்களுள் முதன்மையுடையர் கிதாஞ்சலி நல்லையா அவர்கள். இவர் தமது இளம் வயதுமுதல் இக் கலையில் ஈடுபாடு கொண்டு யாழ் கலா சேத்திரத்தை நிறுவி அதன் மூலம் எத்தனையோ நாட்டிய பேரொளிகளை உருவாக்கி வருகிறார்.



M. SATKUNAM, M. A.

இவரைத் தொடர்ந்து கலைஞர் வேல் ஆனந்தன்; கொக்குவில் சுப்பையா, வீரமணிஐயர். க. நா. நவரெத்தினம் என்போர் நடனக்கலையை வளர்ந்து வருகிருர்கள். மேலும் இக்கலையை மேனுட்டாரும் புரியும் வகையில் பாலேஸ்வரி, ஆனந்தவல்லி, லீலா நாராயணன், கீதாஞ்சலி ஆகிய நாட்டிய வித்தகிகள் பணிபுரிந்து வருகிருர்கள் சிறப்பாக ஆனந்தவல்லி. நடனக்கலை வரலாறு கண்டிரா வகையில் சென்னையிலுள்ள மயிலாப்பூரில் இராகம் - தாளம் - பல்லவிக்கு முதன் முதலாக நடனமாடி அரிய சாதனையை நிலைநாட்டினுர். இவர் போன்று நடனத்துறைக்கு ஆக்கம் கொடுத்து வருபவர் லீலா நாராயணன். இவரின் அபிநய பாவங்களேயும். ஆடல் திறமையையும் மெச்சிய கலைவேந்தர் சொர்ணலிங்கம் நாட்டிய கலா பமயில் என்றும் மாதனை தமிழிசைச் சங்கத்தார் நாட்டிய கலா ஜோதி என்றும் பட்டங்கள் கொடுத்து கௌரவித்துள்ளனர். இத்தகைய கலைஞர்களால் நடனக்கலை இன்று ஈழத்தில் வியத்தகு வண்ணம் வளர்ந்து வருவது போற்றத்தக்கதாகும்,

## நாடகம் :

ஈழத்தில் இத் துறைக்குப் புத்துயிர் கொடுத்தவர் கலையரசு சொர்ணலிங்கமாவர். தன்ளாடும் வயதிலும் தணியாத தாகத்தோடு அயராது உழைத்து வருகிருர். இவர் தேரோட்டிமகன். கைகேகி, கண்டி அரசன், எல்லாளன் போன்ற சரித்திர, புராண வரலாற்று நாடகங்களை அரங்கேற்றியதோடு வியத்தகு முறையில் தாமேநடித்தும் காட்டியுள்ளார்- இவர் போல் இத்துறைச்கு ஏற்றமும் தோற்றமும் கொடுத்து வருபவர் கலாநிதி வித்தியானந்தன் அவர்கள். இவர் நாடகங்களை எழுதி அரங்கேற்றுவதோடு நடிகர்களுக்குப் பயிற்சி கொடுத்தும் வருகிருர். குறிப்பாகத் தற்போது வடமோடி நாட்டுக்கூத்தினை வளர்த்து வருபவர் இவரேயாவர், இன்னும் இலங்கையின் பலபாகங்களிலும் இருக்கின்ற நாடகக்கலைஞர்கள் தமது பேச்சாலும் நடிப்பாலும் இக்கலைக்கு உயிரூட்டி வருகின்றனர்

இவ்வாறுமுத்தமிழ்த் துறைக்குப் பலவழிகளாலும் சேவை செய்து வரும் முத்தமிழ் வித்தகரைப் போற்றிடுவீர்!

---

பேசியபிறகு வருந்துவதை விட, பேசுவதற்கு முன்னல் யோசனை பண்ணுவதுமிகவும் உசிதம்

— பாரசீகப்பழமொழி

அறியாமை அகம்பாவத்தை பெருக்குகிறது, ஏதும் அறியாதவனே தனக்கு எல்லாம் தெரிந்ததாய் நினைத்துக்கொள்கிருன்.

— வில்லியம்வாட்



M. SATKUNAM

# பெண்மை!

திருமதி மங்களேஸ்வரி சபேசன்

'பெண்மை' எனப்படுவது பெண்மணிகள் தமக்குரிய நற்குண, நற்செய்கைகளை மாண்பமைந்து பாது காப்பதாகும். இப் பெண்மையின் இலக்கணத்தை

> "கற்பும் காமமும் நாற்பா லொழுக்கமும்
> மெல்லியற் பொறையும் நிறையும் வல்லிதின்
> விருந்துபுறந் தருகலும் சுற்றம் ஓம்பலும்
> பிறவும் அன்ன கிழவோள் மாண்புகள்."

என்று அடிகளால் தொல்காப்பியர் எடுத்துக் காட்டுகிறார். இத்தகைய பெண்மை மகளிரிடத்துப் பொருந்தியிருப்பின் கணவனின் சிறப்பும் இல்வாழ்க்கை இனிதும் நடைபெறும். இப்பெண்மையைப் போற்றி வாழ்ந்தவர்கள் சங்க காலத்துப் பெண்களாவர். இவர்களின் அகவாழ்வு சிறந்த தாய்மையுடையதாகவும், அன்போடு பிணைந்த பண்புடையதாகவும் விளங்கியது. அப்பெண்கள் கொண்டவனைத்தம் உயிரெனப் பேணினர். அவ்வாறு இணைந்த அன்பின் பெருக்கை 'வாணுதல் மனையுறை மகளிர்க்கு ஆடவர் உயிரென' வரும் குறுந்தொகை செய்யுளால் எடுத்தியம்புகிறார் பரணர். அத்தோடு மகளிர் கற்பினின்றும் வழுவாது தம்மைக் காத்து — கொழுனனையும் உண்டி முதலியவற்றால் பேணி — அவனின் சொற்றிறம்பாது வாழ வேண்டுமென்பதை;

> "தற்காத்துத் தற்கொண்டான் பேணி தகைசான்ற
> சொற்காத்துச் சோர்விலாள் பெண்"

என்றகுறள் தெரிவிக்கிறது. மேலும் கணவன் அங்கக்குறைபாடுடையவனாக இருப்பினும், 'கல்லானாலும் கணவன் புல்லானாலும் புருஷன்' என்ற மணிவாக்கைக் கண்ணெனப் பேணி அவனின் பணியை அணியெனக் கொண்டு, இன்மொழி பேசி இதமுடன் செய்வது, இல்லாளுக்கு இயல்பாக அமைந்திருக்க வேண்டும். அத்தோடு நற்செயல் புரிந்து கணவனை மகிழவைப்பதும், மனம் குழையும் வண்ணம் நகையூட்டலுமாகிய செயதிகள் மகளிர் கொண்டிருக்க வேண்டுமென்பதை

"எப்பணியா லின்புறுவர் காதலரக் காதலரை
யப்பணியா லப்பொழுதே யன்புறுத்தி – யொப்ப
மனங்குழையும் வண்ணம் மகிழ்விப்ப தன்றே
கனங்குழையார் தங்கள் கடன்"

என்றபெருந்தேவனாரின் பாரதப் பாட்டு தெளிவுறுத்துகிறது.

பல்லாற்றானும் இல் வாழ்வுக்குச் சிறப்பைத் தரும் பெண்கள், கணவன் நற்கருமம் புரியும்போது உறுதுணையாகவும். தீநெறியில் செல்லும்போது தாயினும் பேரன்பு காட்டி — நல்லறிவு புகட்டி, சன்மார்க்கத்திற்கு வழிகாட்டவேண்டும். கணவனுக்கு வரும் மாசைக் களைந்து நீதியை நிலைநாட்டுதலே பெண்களின் இலட்சியமாக அமைய வேண்டும். இத்தன்மையுடைய மகளிர் தெய்வீகமடைவர் என்பதற்குச் சான்றாக விளங்குவது சிலப்பதிகாரம்.

இல் வாழ்வில் புகுந்த பெண்கள் மனையறம் மாண்புடன் நடத்துவதற்கு

"அறவோர்க் களித்தலும் அந்தணர் ஓம்பலும்
துறவோர்க் கெதிர்தலும் தொல்லோர் சிறப்பின்
விருந்தெதிர் கோடலும் ......"

ஆகிய பிற நலன்களும் பேணுதல் வேண்டும். இத்தன்மை யாவும் ஒருங்குடன் பொருந்துவதற்குப் பெண்களுக்குக் கல்வியறிவு இன்றியமையாததாகும். இக் கல்வி புறக்கணிக்கப்பட்டமையால்தான் இன்று ஏராளமான குடும்பங்கள் குலைந்திருக்கிறது. சங்ககாலத்தில் இல்லறம் இனிது விளங்கப் பெண்கள் கல்வி நலமிக்கவராய் இருந்தது ஒரு காரணம். அன்று பலர் ஆண்களைக் காட்டிலும் புலமையுடையோராய்த் திகழ்ந்தனர்: அவர்கள் பாடிய செய்யுட்கள் சங்கப் புலவர்களால் ஏற்றுப் போற்றப்பட்டது. அவர்களுள் ஔவையார், காக்கைப் பாடினியார், நச்செள்ளையார், மாறோக்கத்து நப்பசலையார், முடத்தாமக் சண்ணியார் பாரிமகளிர், கோப்பெரும்பெண்டு, நக்கண்ணையார், வெள்ளி வீதியார் என்போர் குறிப்பிடத் தக்கவர். ஆனால் இன்று எவ்வளவோ வசதிகள் இருந்தும் பெண்மணிகள் கல்விபால் ஊக்கம் காண்டாமை வருந்தத் தக்கதாகும். பெண்ணினம் விழித்தெழுந்து "உலக வாழ்க்கையின் நுட்பங்கள் நேரவும் ஓதுபற்பல நூல்வகை கற்று" நல்ல சமுதாயத்தை அமைப்பது பெண்களின் கடமையாகும்.

வாழ்வின் ப்ரதிபங்கு பெண்களின் பெருமையென, மாதொருபாகன் கண்ட தமிழுலகில் இன்று பெண்களை அடக்கி ஆளுவது இழுக்காகும். இதனால் அன்பு பிணைந்து இணைய வேண்டிய ஆண்மையும் பெண்மையும் ஒன்றையொன்று பொருந்த வேண்டி ஏற்பட்டிருக்கிறது. இன்னிலையைப் போக்கிப் பெண்மையினால் ஆண்மையைக் கவர்ந்து வாழவேண்டியது பெண்மையாகும்.

# ஒளி இழந்தாள்

— சிவ. சிவ. சிவசோதிலிங்கம்

வழக்கறிஞர் சிவானந்தத்துடன் உரையாடிக் கொண்டிருந்த நான் அவரிடம் விடை பெற்றுக்கொண்டு என் வரவை காத்துக் கடற்கரையில் இருக்கும் கார்மேகத்தைச் சந்தித்து அவனோடு அளவளாவினேன். அவனைன் தந்தையின் வேண்டுகோளின்படி திருமணம் செய்யுமாறு பலவாறு சொன்னேன். அவனும் தான் திருமணம் செய்வதில்லை என்று பிடிவாதமாகக் கூறினான். அங்கு காற்று வாங்க ஏராளமானோர் வந்து குவிந்தனர். ஆனால் இத்தனைக்கும் மத்தியில் எனது விழிகள், ஒருகோடியில் இருபத்திரெண்டு வயது பூர்த்தியாகாது, அழகே உருக்கொண்டு பரிதாபத்துக்குரிய கோலத்துடன் காட்சியளித்த ஓர் இளம் பெண்ணிடம் சென்றது. அவள் அங்கேயுள்ள காகிதக் கூளங்களை யெடுத்துத் தனது கையிலிருந்த பையினுள் இட்டுக்கொண்டு வருவோர் போவோரிடம் பணம் கேட்டவண்ணமாக நின்றாள் அப்போது ஒருவர் பணத்தை எடுத்து நீட்டினார், அவள் பயந்து கொண்டு 'வேண்டாங்க என்னை விட்டு விடுங்க, நான் ஒருத்தரைக் காதலித்தவள். என் உள்ளத்தை பறி கொடுத்தவள்' என்று கூறிக் கொண்டு. எங்கள் முன்பாக அழுதபடி ஓடினாள். அப்போது தான் அவள் ஒருபைத்தியக்காரி என்பதைநான் அறிந்து கொண்டேன்.

அவளைக் கண்ட மாத்திரத்தில் எனது நண்பன் கார்மேகத்தின் முகம் துன்பத்தினால் கறுத்துக் கண்களில் இருந்து அவனை அறியாது கண்ணீர் வடிந்தவண்ணமாக இருந்தது. அவன் எவ்வளவோ முயன்றும் விழியில் நின்று வழியும் கண்ணீரைத் தடுக்க முடியவில்லை. எனக்கோ ஒன்றும் புரியவில்லை. ஏன் அர்த்தமின்றி அழுகிறாய்" என்று அதிர்ச்சியும் அதிசயமும் கலந்த குரலில் கேட்டேன். சிறிது வினாடியின் பின் பதட்டம் தீர்ந்த நண்பன் 'அதோ ஓடுறாளே அந்தப் பைத்தியம்' என்று கூறிவிட்டு விம்மி விம்மி அழுதான். 'நீ அந்தப் பைத்தியத்திற்காக வனடா இவ்வளவு துன்பப்படுகிறாய்' முகத்தைச் சுழித்துக் கொண்டு கேட்டேன் அவன் என்னைச் சிறிது வெறுப்புடன் பார்த்து, சாதாரண பெண்ணாக -அதுவும் எனக்குத் தெரியாதவளாக இருந்தால் நான் கவலைப்பட மாட்டேன். அவள் எனது ஊர் —அன்றியும் எனது பக்கத்து வீட்டில் வீற்றிருந்து ஆடி மகிழ்ந்த கோல மயில்— எல்லோரிடத்தும் அன்பு காட்டி உரையாடும் குயில் மொ

ழியாள். ஐந்து ஆண்டுகளுக்கு முன்பு நிகழ்ந்தது. இன்றும் என் மனத்திரையில் அப்படியே நிழலாடுறது யார் யாருக்கு என்ன என்பதை யாரறிவார்.

இவள் பெயர் வளர்மதி — பெயருக்குத் தகுந்த அறிவுடைய முழுமதி — அறிவுக்கேற்ப அருள் நிறைந்த குணவதி — எல்லாப் பண்பும் ஒருங்கே அமையப் பெற்றுப் பொற்பரசியாய் மிளிர்ந்த இவள், கல்லூரியில் படிக்கும் போதே ஒருவனிடத்தில் தன் உள்ளத்தைப் பறிகொடுத்தாள். அவனும் உள்ளன்போடு காதலித்தான். இருவரும் உடல் இரண்டாயினும் உயிர் ஒன்றாக இணைந்தனர். அன்பால் இருவரும் ஒருவராக மகிழ்ந்து வரும் நாளில்; இவர்களின் வாழ்வில் விதி சதிசெய்யும் காலம் நெருங்கியது. வளர்மதியின் சம்மதத்துடன் அவளின் காதலன் மேல் படிப்பிற்காக அயல்நாடு சென்றான். ஆனால் வளர்மதிக்கு அவனில்லாத ஒவ்வொரு பொழுதும் ஒவ்வொரு யுகங்களாகக் கழிந்தது. அவளின் உடல்முழுதும் அவனின் நினைப்பால் நிறைந்திருந்தது. அவனும் எப்போது தனது படிப்பை முடித்து விட்டு வந்து. வளர்மதியை மணந்து அவளுடன் காதல்வானில் இன்பமாகப் பறக்க வேண்டுமென்ற துடிப்பை உடையவனாகவே இருந்தான். காலங்கள் மூன்று ஆண்டுகள் உருண்டோடி விட்டன. இருவருக்குமிடையில் ஏற்பட்ட கடிதத் தொடர்புகளோ எண்ணுக்கடங்காதவை. தனதுகாதலன் படிப்பை முடித்து வந்து தன்னைக் கைப் பிடிக்கப் போகுங்காலம் நெருங்கிவிட்டது என்ற பூரிப்பினால் மகிழ்ச்சி கொண்டிருக்கும் வேளையிலே, வளர்மதியின் அண்ணன் அவளுக்கு ஒரு டாக்டரைத் திருமணம் செய்துகொடுக்க எண்ணியிருப்பதை வெளியிட்டான்: திருமணச் செய்திகேட்ட வளர்மதி பாம்பு தீண்டியமான்போல் நடுங்கினாள் — அனலது பட்ட மெழுகுபோல் உருகினாள். தன் கற்புக்கும் காதலுக்கும் களங்கம் ஏற்படுமோ என்று விம்மினாள் தமையனிடம் தன் உள்ளத்தை வேறொருவரிடம் பறி கொடுத்து விட்டதாகக் கூறினாள். அவனின் உள்ளமோ சிறிது கூட அவளின் எண்ணத்துக்கு இசையவில்லை. அவளோ தனக்கு திருமணம் வேண்டாமென்று கூறினாள் — அவனின் காலைப் பற்றிக் கெஞ்சுனாள் — கரத்தைப் பிடித்துக் கொஞ்சினாள் ஆனால் ஒன்றுக்கும் இளகாத அவன் திருமணத்திற்குச் சகல ஏற்பாடுகளும் முடிந்து விட்டது என்று கூறிவிட்டுச் சென்றான்.

அவள் உள்ளமோ அலைகடல் உறங்கினும் உறங்காது அலைந்தவண்ணமாகவே இருந்தது. திடீரெனக்கண்ணை இழந்தவள் போல் செய்வதறியாது திகைத்தாள். தன் தாய் தந்தையர் சிறுவயதில் இறக்கத் தன்னைத் தூக்கி எடுத்து இரவு

பகல் பாராது வளர்த்த தமையனுக்காகத் தன் காதலைத் தியாகம் செய்வதா? அல்லது தனக்காகவே வாழும் காதலனுக்காகத் தமையனின் அன்பைத் துறப்பதா? என்ற மனப் போராட்டத்தில் சிக்குண்டு தவித்தாள். காதலன் வரைந்த மடல்களுக்குப் பதில் வரைய வழியின்றிக் கண்ணீர் சொரிந்தாள். அவளிடம் பெருகி வழிந்த பொலிவு போயிற்று—இனிமை ஒழுகும் பேச்சு மறைந்தன. இவ்வாறு நடைப் பிணமாகக் காட்சியளித்த வளர்மதிக்கும் டாக்டர் வேதாசலத்திற்கும், திருமணம் நிகழ்ந்தது.

திருமணம் நடந்ததே தவிர இருவர் உள்ளமும் ஒன்று சேரவில்லை. டாக்டருக்கு வளர்மதியால் துன்பமே அன்றி இன்பமில்லை. அவள் இரவு முழுமையும் தனிமையில் இருந்து விழித்த இமை கொட்டாது, சிந்தனை உலகில் சஞ்சரித்தாளே தவிர இன்பமாகத் தன் கணவனோடு உரையாடியது கிடையாது. கணவன் எவற்றை கேட்டாலும் அதற்கு அவனின் உள்ளம்குளிரும் படி பேசியதே இல்லை, இளமை உள்ளம் படைத்த டாக்டர் வேதாசலத்திற்கோ அவளிடத்து வெறுப்பு வளர்ந்து கொண்டே வந்தது. வளர்மதியோ எப்படியாவது காதலனைக் கண்டு தனக்கு ஏற்பட்ட இன்னல்களைச் சொல்லித் தன் காதலின் தூய்மையை வெளிப்படுத்தத் துடி துடித்தாள். திருமணம் நடந்தேறி ஆறு மாதம் கழிந்தும் இந்நினைப்பைத் தவிர வேறு எண்ணம் யாதும் இல்லாதவளாக இருந்தாள். அப்போது மேற் படிப்புக்குச் சென்று திரும்பிய காதலன் வந்த கப்பல் புயலில் சிக்குண்டு கடலில் ஆமிழ்ந்தியது என்ற செய்தியைப் பத்திரிகை வாயிலாக அறிந்தாள். தனது உள்ளத்தில் இது வரைகாலமும் புதைத்துவைத்த கருத்துச் சுமையை, இனியாருக்குக் கூறி ஆறுதல் அடைவேன் என்ற ஏக்கத்தால் மூளை சித்த சுவாதீனமிழந்து இன்று பைத்தியக்காரியாக அலைந்து திரிகின்றாள். அவள் வாழ்க்கை நறிய மலர்களும் இன் சுவைக் கனிகளும் நிறைந்து— வண்டுகள் இசை பரவும் பூங்காவாக மிளிர வேண்டும். என்று கனவு கண்டாள். ஆனால் கள்ளியும் கருவேலமரமும, கற்றாளையும் மலிந்து, முட்புதர்கள் அடர்ந்த காடாக மாறிவிட்டது என்றான்,

ஆனால் மீண்டும் என்னை நோக்கி நண்பா! புயலில் சிக்குண்ட கப்பலில் பிரயாணம் செய்தவர்களில் மாலுமிகளால் காப்பாற்றப் பட்டும், வளர்மதியின் அன்புக்குப் பாத்திரப் பட்டும் விளங்கும் அந்த மனிதன் வேறு யாருமல்ல, உன் நண்பனும் துர்ப்பாக்கியசாலியுமாகிய இந்தக் கார்மேகமே என்று. தழு தழுத்த குரலில் விம்மிக் கொண்டு சொல்லி முடித்தான்: என்னையுமறியாமல் கண்களில் நீர் கலங்கி நின்றது.

‘கார்மேகத்தைப் பிரிந்தமையால் வளர்மதி ஒளி இழந்தாள்’

# நன்றி!

இம்மலர் சிறப்புற—
கட்டுரை - கவிதை - கதை வழங்கிய எழுத்துலக படைப்பாளிகளுக்கும் —

வரிச்சுமையையும் பொருட்படுத்தாமல் இன்முகத்துடன் வரவேற்று விளம்பரங்கள் வாழ்த்துச் செய்திகள் தந்து, எங்கள் பணியைச் சிறப்புறச் செய்ய தூண்டுகோலாக இருந்த வணிகப் பெருவள்ளல்களுக்கும் —

மலரை சிறப்புற அச்சிட்டு கொடுத்த நல்லைநகர் நாவலன் பதிப்பகத்தாருக்கும் —

எங்கள் நன்றி!



நாடு செழிக்க கைத்தொழில் ஓங்குக!

குறைந்த விலை! சிறந்த பொருட்கள்!

எல்லோருக்கும் பிடித்தமான — தரமான — உறுதியான பூட்டுக்கள், பிணைச்சல்கள், சேற்றுக்கள், கிறீல்கள் தயாரிப்பதில்

திறமை வாய்ந்த ஸ்தாபனம்

## காமாட்சி அம்பாள் கைத்தொழிற் சங்கம்

இங்கே

நீரிறைக்கும் இயந்திரங்களுக்கான:

வண்டிகள் — உதிரிப்பாகங்கள்,
சயிக்கிள், கார் கரியர்கள்,

கமக்காரர்களுக்குத் தேவையான:

ஆயுதங்கள், வீட்டுத் தளபாடங்கள்,
பாடசாலை உபகரணங்கள்

குறைந்த விலையில்

மொத்தமாகவும் — சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்.

விபரங்களுக்கு:

## காமாட்சி அம்பாள் கைத்தொழிற் சங்கம்

நீர்வேலி

போன்: 809

எங்களின் மனமுவந்த

அன்பளிப்பு

V

# வல்லிபுரம் அன் கோ

வவுனியா.

அன்பளிப்பு

அம்பாள் ஸ்ரோர்ஸ்

மெயின் வீதி, பருத்தித்துறை.

BEST COMPLIMENTS
FROM

RAJAH COMPANY

MAIN STREET, POINT PEDRO.

Always Available in Ready Stock.

With the Best

Compliments of

FANCY EMPORIUM

POINT - PEDRO

சிறந்த

படப்பிடிப்பு வேலைகளுக்கு

குகன் ஸ்ரூடியோ

பருத்தித்துறை.

சிறந்த முறையில்

கடிகாரங்கள் திருத்துவதற்கு

நாடுங்கள்

ஜெனீவா வாச் வேக்ஸ்

பருத்தித்துறை.

# NIHALWATHY ENGINEERING

இதோ !

பருத்தித்துறையில் கடைச்சல் வேலைகளுக்கு புதிய ———

## நிஹால்வெதி என்ஜினியரிங்

மறவாதிர்கள் !

சிறந்த முறையில் ———

காஸ் வெல்டிங், எலெக்றிக் வெல்டிங்

கேற், கிறீல் ——— ஆகிய

இயந்திர வேலைகள் செய்வதற்கு

நம்பிக்கையான ஸ்தாபனம்

## நிஹால்வெதி ——— ——— என்ஜினியரிங்

மெயின் வீதி, பருத்தித்துறை.

## கலாவதி நகை மாளிகை

239, பிரதான வீதி, — பருத்தித்துறை.

தற்கால நவநாகரீகத்திற்கேற்ற

டிசைன்களில் தங்க வைர நகைகளை

செய்பவர்கள்.

ஓடர் நகைகள் குறித்தகாலத்தில்

செய்து கொடுக்கப்படும்.

## KALAWATHY JEWEL HOUSE

Prop: MRS. P. RATNASINGAM & SONS

MAIN STREET, POINT PEDRO.

DAIL: 567

அன்பளிப்பு

V

# கலைவாணர்

# வில்லிசைக் குழுவினர்

அச்சுவேலி.

பிரபல்யம் வாய்ந்த :—

சைரூன் ஓடு, டைமன் குக்கர்

ஏஜென்ஸியாளர்.

இவர்களிடம்

மின்சார உபகரணங்கள்,

பெயின்ற் வகைகள்,

இரும்புச் சாமான்கள், பலகைகள்,

மோட்டார் இணைப்புப் பாகங்கள்

மலிவான விலையில் தரமானவையாக

வாங்குவதற்கு இன்றே விஜயஞ் செய்யுங்கள்

கு. க. சுப்பிரமணியம் அன் கம்பனி

146, 147, மெயின் வீதி,

பருத்தித்துறை.



சுவையான, சுத்தமான,

சாப்பாட்டிற்கு,

பலகாரங்களுக்கு,

தின்பண்டங்களுக்கு

அனைவருமே

இன்று நாடிவருவது

↓

ஸ்ரீ முருகன் தேநீர்ச்சாலை

மெயின் வீதி, பருத்தித்துறை.

இன்றைய நவீன டிசைன்

தங்க நகைகளுக்கு

நம்பிக்கை நாணயத்திற்கு

அனைவருமே நாடுவது

உறுதிக்கும் உத்தரவாதத்திற்கும்

எல்லோருமே தேடுவது

# ராணி ஆபரண மாளிகையே

நீங்களும்

இன்றே விஜயம் செய்யுங்கள்

# ராணி ஆபரண மாளிகை

உரிமையாளர்; K. முருகேசு

மெயின் வீதி, பருத்தித்துறை.

# சுசீலா ஆபரண மாளிகை

உரிமை: K. V. தெய்வேந்திரம்

பிரதான வீதி, ★ பருத்தித்துறை.

தற்கால நவநாகரீகத்திற்கேற்ற

டிசைன்களில் தங்க வைர

நகைகளைச் செய்பவர்கள்.

ஓடர் நகைகள் குறித்தகாலத்தில்

செய்து கொடுக்கப்படும்

# SUSILA JEWEL HOUSE

MAIN STREET, POINT PEDRO.

BEST COMPLIMENTS

RAJA CORPORATION

COLOMBO — KURUNAGALA — KILINOCHCHI — JAFFNA

மலர் சிறப்புற
எமது வாழ்த்துக்கள் !

இராசலட்சுமி நகை மாளிகை

வவுனியா

வாருங்கள் !                                    வந்து படியுங்கள்

இதோ !

## புதிய கல்வி நிலையம்

கலை, விஞ்ஞானம், வர்த்தகம் — ஆகிய பாடங்களில்

க. பொ. த. சாதாரண, உயர்தர — வகுப்புக்கள்,

6, 7, 8 ம் வகுப்புக்கள்.

சிறந்த முறையில் தகுந்த ஆசிரியர்களைக் கொண்டு

கற்பிக்கப்படுகின்றன.

பரீட்சையில் சித்தி நிச்சயம்.

விபரங்களுக்கு

# மந்திகை கல்வி நிலையம்

புலோலி தெற்கு : புலோலி.

---

எல்லாவித மருந்துகளும்

பெறுவதற்கு

தலைசிறந்த ஸ்தாபனம்!

## ரேயல் மருந்துச்சாலை

உங்களுக்கு வேண்டிய :-

★ ஆங்கில மருந்துகள் !

★ சித்த — ஆயுர்வேத மருந்துகள் !

★ அபிடேகக் கூட்டு, வாசனைத் திரவியங்கள் !

★ பச்சை மூலிகைகள் தைலங்கள் என்பன

எம்மிடம் கிடைக்கும்

விபரங்களுக்கு:

# ரேயல் மருந்துச்சாலை

உரிமையாளர்: A. சுப்பிரமணியம்

59, பிரதான வீதி, ★ பருத்தித்துறை.

அன்பர்களே!

சகல விதமான மின்சார

உபகரணங்களும், எஸ் - லோன் தண்ணீர்ப் பைப்

வகைகளும், குறைந்த விலையில்

எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம்

விஜயம் செய்யுங்கள்

# ராஜன் எலெக்ரிக்கல்

பஸ் நிலையம் : பருத்தித்துறை

# SCIENCE CENTRE

மாணவர்களே!

விஞ்ஞான பாடங்களை சுலபமாகக் கற்றுத்

தேர்ச்சி பெற — இங்கே வாருங்கள்

G. C. E (O. L., A. L.) வகுப்புகளுக்கு

விஞ்ஞானபாடங்கள் அனுபவமுள்ள

ஆசிரியர்களினால் கற்பிக்கப் படுகின்றன.

விசேஷ ஆங்கில சிங்கள வகுப்புகளும்

நடைபெறும்.

விபரங்களுக்கு:

# விஞ்ஞான கலாசாலை

நெல்லியடி : கரவெட்டி.

உங்களுக்குப் பிடித்தமான கலைப்பொருட்களுக்கு

**கிருஷ்ணராஜன்**

★ கோபுரங்களுக்கு - வீடுகளுக்கு மைவேலைகள்
★ தெய்வச் சிலைகள் — பலவித உருநாடுகள்
★ அழகுப் பொம்மைகள் அலங்காரப் பொருள்கள்
★ மனதுக்குகந்த ஓவியம் வரைதல் — ஆகிய

எல்லாவிதமான - சிற்ப சித்திர வேலைகளும்
நுணுக்கமான வேலைப்பாட்டுடன் மிகச் சிறந்த
முறையில் செய்து கொடுக்கப்படும்.

★ **உங்கள் நாடகங்களுக்கு ஒப்பனையாளர் தேவையா ?**

இதோ நாங்கள் இருக்கின்றோம் !

முகபாவனையைத் துல்லியமாக விளங்கவைக்க —
உணர்ச்சிக் கோடுகளைப் பிரதிபலிக்க —

இந்திய முறைப்படி செய்யப்படும்
இறுதிவரை அழியாத முக "மேக்கப்"

எங்கள் கைவண்ணத்தில் உருவாகும் காட்சியமைப்பு!

ஆடையமைப்பு, சிகையலங்காரம் —
உங்கள் நாடகங்களுக்கு மெருகூட்டும் !

**அநுபவம் — சேவை — உழைப்பு**

விபரங்களுக்கு :

# கிருஷ்ணராஜன்

## → சாரதா ஆட்ஸ் ←

"சோதி பவனம்"

மாதனை : பருத்தித்துறை

## Ambal Motor Vehicle Engineering

சகல இயந்திரங்களையும் பழுதுபார்ப்பதற்கு

வடமாகாணத்தில்

தலைசிறந்த ஓரே ஸ்தாபனம்

## அம்பாள் மோட்டர் வெஹிக்கிள் என்ஜினியரிங்

★ கடைச்சல்

★ றியோறிங்

★ றெற்பேசிங்

★ எலெற்றிக் வெல்டிங்

★ றெற்சிலீவ் பிற்றிங்

★ கேற், கிறீல்

என்பனவோடு

கார், லொறி, ட்ராக்டர், வாட்டர் பம்ப், அச்சு இயந்திரம் அரிச்சல் இயந்திரம் ஆகியனவற்றையும் அனுபவமும், தேர்ச்சியும் வாய்ந்த தொழில் நுட்பவியலாளர்களைக் கொண்டு சிறந்த முறையில் திருத்திக் கொடுக்கப்படும்.

இன்றே விஜயம் செய்யுங்கள்.

# அம்பாள் மோட்டர் வெஹிக்கிள் என்ஜினியரிங்

அச்சுவேலி தெற்கு. அச்சுவேலி.


நாவலன் பதிப்பகம் — நல்லூர் — யாழ்ப்பாணம்

## பாவனையாளருக்கு ஓர் நற்செய்தி !

உங்கள் தேவைகளுக்கு
இன்றே விஜயம் செய்யுங்கள் !

உங்கள் வீட்டுத் தளபாடங்கள் !

★ நிலைசதவு, யன்னல், வீட்டு உபகரணங்கள்.

★ கடற்றொழிலாளருக்கு வலிபலகை ஓடுபலகை
கட்டுமர பவுண்டேசன், தாங்கு கம்பு

★ கப்புகள், கம்புகள், கம்பிக் கட்டைகள்,
பிறசெட்டுகள், விறகு என்பனவற்றுடன் —
பலகை வகைகள், தீராந்திகள், றீப்பை வகைகள்

வேண்டிய அளவுகளில்
உடனுக்குடன் பெற்றுக்கொள்ளலாம்

தற்கால நவநாகரீகத்துக்கு ஏற்ற டிசையின்களில்
அழகிய வீட்டுத்தளபாடங்கள செய்பவர்கள்

**ஓடர்கள் குறித்த காலத்தில் செய்து கொடுக்கப்படும்**

விபரங்களுக்கு :

↓

# ஜெயந்தி மரக்காலை

உரிமையாளர்: S. சச்சிதானந்தம்

பிரதான வீதி, ★ பருத்தித்துறை.